www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925-2025

மலர் 87 | இதழ் 44 | 2025 பிப்ரவரி 02 - பிப்ரவரி 08 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

## அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற

# எழுச்சிமிகு 18வது மாநில மாநாடு

## பல்லாயிரம் இளைஞர்கள் பங்கேற்ற மாபெரும் பேரணி



**கட்டணமில்லாக் கல்வி, அனைவருக்கும் வேலை எனும் முழக்கத்தோடு அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் 18வது தமிழ்நாடு மாநில மாநாடு தருமபுரி நகரில் ஜனவரி 26 குடியரசு தினத்தில் தொடங்கி 27, 28 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது.**

ஜனவரி 26 குடியரசு தினத்தில் தருமபுரி பாரதிபுரத்திலிருந்து புறப்பட்ட இளைஞர்களின் இலட்சியப்பேரணியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்றக் குழுத்தலைவரும் தளி சட்டமன்ற உறுப்பினருமான தி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார். செந்தொண்டர் அணிவகுப்புடன் சென்ற பேரணியில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் வந்திருந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

தருமபுரி நகரின் முக்கிய வீதிகளில் சென்ற இளைஞர்கள் பாசிச பா.ஜ.க அரசுக்கு எதிராகவும் வேலையின்மைக்கு எதிராகவும் விண்ணதிர முழக்கங்களை எழுப்பினர். பேரணியில் கலந்து கொண்ட இளைஞர்களை தருமபுரி நகர மக்கள் வாழ்த்தினர்.

இந்தியஜனநாயகவாலிபர்சங்கதோழர்களும் ஏ.ஐ.டி.யூ.சி தோழர்களும் மலர்களை தூவி வாழ்த்தி முழக்கமிட்டனர். பேரணி வள்ளலார் திடலில் நிறைவடைந்து, இளைஞர் எழுச்சிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பேரணிக்கும் பொதுக்கூட்டத்திற்கும் மாநிலச் செயலாளர் க.பாரதி தலைமை தாங்கினார்.

பொதுக்கூட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், திரைப்பட இயக்குனரும் நடிகருமான எழுச்சி நாயகன் சமுத்திரக்கனி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச்செயலாளர் இரா.முத்தரசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலத் துணைச் செயலாளர்கள் நா.பெரியசாமி, மு.வீரபாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.சுப்பராயன், வை.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, இளைஞர் பெருமன்ற அகில இந்தியப் பொதுச் செயலாளர் இரா. திருமலை, அகில இந்தியத் தலைவர் சுக்ஜிந்தர் மகேசரி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ந.நஞ்சப்பன், தர்மபுரி மாவட்ட செயலாளர் எஸ் கலைச்செல்வம் உள்ளிட்ட தலைவர்கள் உரையாற்றினர்.

இளைஞர் பெருமன்ற மாநிலத் தலைவர் த.கு.வெங்கடேசன், இளம்பெண்கள் மாநில ஒருங்கிணைப்பாளர் கலை.அஸ்வினி ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். நிறைவாக புதுச்சேரி கலை ஆலயம் குழுவினரின் கவிஞர் தமிழ்ஒளியின் வீராயி நாடகம் நடைபெற்றது. தர்மபுரி இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் நவீன் குமார் நன்றி உரையாற்றினார்.

ஜனவரி 27 திங்கள் காலை தர்மபுரி மதுராபாய் திருமண மண்டபத்தில் பிரதி நிதிகள் மாநாடு தொடங்கியது. இளைஞர் பெருமன்றத்தின் கொடியினை முன்னாள் மாநிலச் செயலாளர் வ.பாலமுருகன் ஏற்றி வைத்தார். முன்னாள் மாநிலத் தலைவர் பெ .முருகேசு தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வை தொடங்கி வைத்தார். நெல்லை பெ.சுடலைமுத்து நினைவு ஜோதியை முன்னாள் மாநிலச் செயலாளர் த.லெனின் பெற்றுக்கொண்டார்.

மாநாட்டின் தலைமைக்குழுவாக த.கு.வெங்கடேசன், கு.ராஜேந்திரன், கலை. அஸ்வினி ஆகியோர் செயல்பட்டனர். மாநாட்டில் மினிட்ஸ் குழு, உணவுக்குழு, தீர்மானக்குழு ஆகியவை தேர்வு செய்யப்பட்டு

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### புதிய நிர்வாகிகள்

**மாநிலத் தலைவர்**
இரா.தமிழ் பெருமாள்

**மாநிலச் செயலாளர்**
க.பாரதி

**மாநிலப் பொருளாளர்**
க.காரல்மார்க்ஸ்

**மாநில துணைத் தலைவர்கள்**
இரா.ரமேஷ்
எம்.செல்வகுமார்
மோ.வெங்கடேஷ்
ரஞ்சனி கண்ணம்மா
எல்.பகத்சிங்

**மாநில துணைச் செயலாளர்கள்**
ஜி.சரவணன்
கலை. அஸ்வினி
கா.கிறிஸ் பாக்கியம்
எஸ்.தெய்வசிகாமணி
எம்.சுரேந்தர்





### குடியரசுக்கு அச்சுறுத்தல்கள்
-டி.ராஜா

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் அரசியலமைப்பின் விழுமியங்களைப் பாதுகாப்பதில் முன்னணியில் இருந்து வருகிறது. மேலும் அது வரைவு செய்வதிலேயே குறிப்பிடத்தக்கப் பங்களிப்புச் செய்திருக்கிறது.

... பக்கம் 3

### சிந்துவெளிக்கு முன் செல்லும் பண்டைத் தமிழ்ப் பண்பாடு
-மே.து.ரா.



தமிழ்நாட்டில் இரும்புப் பயன்பாட்டின் காலம் கி.மு. 3395 என்ற அளவிலேயே இருந்திருப்பது தெளிவாக உறுதிசெய்யப்பட்டுள்ளது.

... பக்கம் 5

### சீமானின் நாசகர பிம்பக் கட்டமைப்புகள்
-யமுனா ராஜேந்திரன்



புலிகளின் தேசியம் அனைத்துப் பிரிவையும் உள்ளடக்கிய (Inclusive) தேசியமாகத்தான் இருந்தது. சீமானது போல அது பிற இனவெறுப்பு உயிர்க்கூறுத் தேசியம் (genetically defined racist nationalism) அல்ல.

... பக்கம் 7

### சிறு குறு தொழில்களை முடக்கும் மோடி அரசு!
-த.லெனின்

பெரிதாகப் பேசப்படும் முத்ரா திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து வழங்கப்படும் கடன் தொகையின் தனிநபர் சராசரி வெறும் ரூ.45,203 மட்டுமே. இந்தப் பணத்தைக் கொண்டு என்ன வகையான தொழில்களை உருவாக்க முடியும்? பிரதமருக்கும் நிதி அமைச்சருக்குமே வெளிச்சம்.

... பக்கம் 10

கட்சிக் கடிதம்

# மகிழ்ச்சி! பெரும் மகிழ்ச்சி!!



போர்க்குணமிக்க தோழர்களே!

**வகுப்புவாத வெறிபிடித்தலையும் பா.ஜ.கவின் தலைமையிலான ஆட்சி, தனது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிட மெல்ல, மெல்ல காய் நகர்த்தி வருகிறது.**

தேசபக்த வேடம் புரிந்து கொண்டு நாட்டிற்கு நல்லது செய்வது போன்று பொய்த் தோற்றத்தை உருவாக்கிக் கொண்டு, நாட்டு மக்களை மதரீதியாகப் பிளவுபடுத்தும், அற்பத்தனமான காரியங்களை, கூச்சநாச்சிமின்றி, தனக்குக் கிடைத்திட்ட அதிகாரத்தைக் கொண்டு, சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.



சிறுபான்மை மக்களைத் தொடர்ந்து அச்சுறுத்தி, அவர்களிடத்தில் அவநம்பிக்கையை உருவாக்கி, அவர்களை அல்லல்பட வைக்கின்றது.

வக்ஃப் மசோதா என்ற ஒன்றை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியுள்ள நிலையில், அதனை எதிர்க்கட்சிகள், குறிப்பாக இந்தியா கூட்டணிக் கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. எதிர்ப்பைச் சமாளிக்கவும், தாங்கள் ஜனநாயக முறையில் செயல்பட்டு வருகின்றோம் என்றதொரு போலியான தோற்றத்தை நாட்டு மக்களை நம்ப வைக்கவும், மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக்குழுவிற்கு அனுப்பி அதன் பரிசீலனைக்கு விடுவதாகத் தெரிவித்தனர்.

நாடாளுமன்றக் கூட்டுக் குழுவிற்கு பாஜகவைச் சேர்ந்தவர் தலைவர் என்பது மட்டுமல்ல, பாஜக மற்றும் அதன் கூட்டணியில் உள்ளவர்கள் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆவர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறைந்த எண்ணிக்கையில் இடம் பெற்றுள்ளனர்.

நாடாளுமன்ற கூட்டுக்குழு அவசர அவசரமாகப் பலமுறை கூடியது. ஒவ்வொரு கூட்டத்திலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறும் கருத்துகளுக்கு மற்றும் திருத்தங்களுக்கு மதிப்பளிப்பது இல்லை என்பது மட்டுமல்ல, கூட்டுக்குழுவின் தலைவரின் அணுகுமுறை ஜனநாயக முறையில் அமையவில்லை என்பது மட்டுமல்ல, ஆத்திரமூட்டும் நடவடிக்கையைத்தான் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார் என்பது தொடர்ந்து ஊடகங்களின் மூலம் அறிந்தோம்.

இறுதியாகக் கூட்டுக் குழுவின் கடைசிக் கூட்டத்தில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறிய எந்த ஒரு திருத்தமும் ஏற்கப்படாமல் அனைத்தும் நிராகரிக்கப்பட்டன.

அதே நேரத்தில் ஆளும் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த "ஆமாம் சாமி" போடும் உறுப்பினர்கள் அளித்த திருத்தங்கள் மட்டும் ஏற்கப்பட்டன.

அரசுக்கு ஆதரவாகக் கூட்டுக் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்படும். இதுதான் இன்றைய பா.ஜ.கவின் ஜனநாயகம்.

அடுத்து பொது சிவில் சட்டத்தை பா.ஜ.க ஆளும் உத்தரகண்ட் மாநிலம் நாட்டிலேயே முதல் முறையாக அறிமுகப்படுத்தி உள்ளது.

இதனை பா.ஜ.க தலைவர்கள் வரலாற்றுச் சாதனை என்றும், பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டும் என்றும், வானளாவப் புகழ்ந்து போற்றி வருகின்றனர்.

மேற்கண்ட இரு பிரச்சனைகளும் நாட்டு மக்களின் ஒற்றுமைக்கா? அல்லது சீர்குலைக்கவா? என்பதனை ஆழ்ந்து பரிசீலித்திடல் வேண்டும்.

நாட்டிற்கு நல்லது செய்வதாகக் கூறி நாட்டு மக்களைப் பிளவுபடுத்தும், அச்சுறுத்தும் நடவடிக்கையாகும். அவர்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள். தங்களைத் தவிர வேறு எக்கட்சியும் அதிகாரத்திற்கு வந்து விடக் கூடாது என்பதில் உறுதியான நிலைப்பாட்டை மேற்கொள்கிறார்கள்.

அத்தகைய நோக்கம் பிசிறின்றி நிறைவேற வேண்டுமாயின் மக்களின் ஆதரவும், அவர்களின் வாக்குகளும் அவர்களுக்குத் தேவைப்படுகிறது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையை அவர்களால் எட்ட முடியாத அளவிற்கு மக்கள் தோற்கடித்தார்கள்.

அத்தோல்வியைச் சரி கட்டிட அவர்களுக்குத் தெரிந்திட்ட ஆயுதம் மட்டுமல்ல, அதுவே அவர்களின் அடிப்படைக் கொள்கையாகும்.

அத்தகைய கொள்கை என்பது மக்களை மதரீதியில் பிளவுபடுவது என்ற ஒற்றைக் குறிக்கோளுடன் செயல்பட்டு வருகின்றார்கள். இத்தகைய அநாகரிகமான அரசியலை மேற்கொள்வதன் மூலம், தங்களின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளவும், மேலும் பலப்படுத்திக் கொள்ளவும் மேற்கொண்டு வரும் முயற்சிகள் மிக, மிக அபாயகரமானது.

இத்தகைய பேரழிவிலிருந்து நாட்டைக் காக்க வேண்டாமா? அத்தகைய காரியத்தைச் செய்யப் போகின்றவர்கள் யார் என்ற வினாவிற்கு விடை கிடைத்தது தர்மபுரியில்!

ஆம்! நமது அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின், தமிழ்நாடு மாநில 18வது மாநாட்டை நடத்தித் தரும் பெரும் பொறுப்பை, தர்மபுரி மாவட்டக் குழு மிகுந்த மகிழ்ச்சியோடு மேற்கொண்டது.

நம் எதிர்பார்ப்புக்கும் மேலாக மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவதில் தோழர்கள் மிகுந்த உற்சாகப் பெருக்குடன் பணியாற்றினார்கள்.

மூத்த தோழர், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர், தோழர் நா.நஞ்சப்பன் தலைவராகவும், மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ஆற்றல்மிகு தோழர் எஸ். கலைச்செல்வன் செயலாளராகவும், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் தோழர் எஸ். தேவராஜன் பொருளாளராகவும் கொண்ட வரவேற்புக் குழு அமைக்கப்பட்ட நாள் முதலாய், இரவு பகல் பாராது பணியாற்றியதன் மூலம் மாநாடு வெற்றிகரமாக அமைந்தது.

நகரத்திலும், சுற்று வட்டாரங்களிலும், சுவர் விளம்பரங்கள், தட்டி, பேனர்கள் என்று மாநாட்டைப் பறை சாற்றியது.

நகர் முழுவதும் நீலமும், சிவப்பும், நடுவில் நட்சத்திரமும் கொண்ட இளைஞர் பெருமன்ற கொடி அழகாக, நேர்த்தியாக, கம்பீரமாகப் பட்டொளி வீசிப் பறந்த வண்ணம் இருந்தன. சிவப்பு நீலத் தோரணங்கள் நகரை அலங்கரித்தன.

இளைஞர் பெருமன்றச் செயலாளர் தோழர் க.பாரதியும், ஏனைய நிர்வாகிகளும், பல மாதங்களாக மேற்கொண்ட இடைவிடா முயற்சிகளும், நிர்வாகிகளுக்கு தோழர் க.சந்தானம் அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கியது மட்டுமின்றி, உற்சாகத்தோடும், பொறுப்புணர்வோடும் செயல்பட ஊக்குவித்து, உற்சாகம் ஊட்டியதாலும் பெரும் பயன் அளித்தது.

44 மாவட்டங்களிலும் இளைஞர் பெருமன்ற கிளைகளைப் புதுப்பித்தும், புதிய கிளை அமைப்புகளை உருவாக்கியும், இடைநிலை அமைப்புகளின் மாநாடுகளை நடத்தி முடித்து, அனைத்து மாவட்ட மாநாடுகளையும் மிக வெற்றிகரமாக நடத்தி முடித்ததுடன், கிளை முதல் அனைத்து அமைப்புகளுக்கும் இளம் தோழர்களைத், நம்பிக்கை நட்சத்திரங்களாக, புதியநிர்வாகிகளாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதன் முத்தாய்ப்பாக மாநில மாநாடு தர்மபுரியில் ஜனவரி 26, 27, 28 ஆகிய மூன்று தினங்கள் நடைபெற்றன. அதன் தொடக்கம் ஜனவரி 26 ஆம் நாள். ஆம்! அன்றைய நாள் நாட்டின் மிக முக்கியமான நாள்.

அன்றுதான் நமது நாட்டின் 26 வது குடியரசு தின நாளாகும்.

குடியரசு நாளில் தர்மபுரி நகரம், இந்நாள் வரை கண்டிராத மாபெரும் எழுச்சியைக் காண முடிந்தது. நாட்டின் எதிர்காலச் சிற்பிகள் நம்பிக்கை நட்சத்திரங்களாக இளம் தோழர்களின் லட்சியப் பேரணியைக் கண்டது.

வகுப்பு வாத சக்திகளே, பிளவுபடுத்தும் சக்திகளே, சர்வாதிகார சக்திகளே, பாசிச சக்திகளே! உங்களை எதிர்கொள்ள, உங்கள் கொட்டத்தை ஒடுக்கிட இதோ இளைஞர் படை ஆயத்தமாகிவிட்டது.

நாட்டின் விடுதலைப் போர்க்களத்தில் மாவீரன் பகத்சிங்கும், ராஜகுருவும், சுகதேவும் சிந்திய இரத்தம் ஒருபோதும் வீண் போகாது.

எங்கள் முன்னோர்களே! நீங்கள் செய்திட்ட பெரும் தியாகத்தால் பெற்ற சுதந்திரத்தை இழக்க மாட்டோம், ஒருபோதும் இழக்க மாட்டோம் எனச் சூளுரைத்துத் திரண்ட இளம் தோழர்களே! வாழ்த்துகள்!

உங்கள் பணி தொடரட்டும்! புதிய தலைமையின் கீழ் தொய்வின்றித் தொடரட்டும்!

இளைஞர் மன்றம் இல்லா ஊரில்லை, இளைஞர் மன்றமில்லா நகரம், வார்டுகள் இல்லை என்பதனை நிலைநாட்டுங்கள்.

வகுப்புவாதச் சக்திகளின் பேராபத்தை வேரறுக்க, விடிவெள்ளியாய்க் கிளம்புங்கள். மீண்டும் ஒரு சுதந்திரப் போரை உங்கள் காலத்தில் நிகழ்த்துங்கள்.

முயன்றால் முடியாதது என எதுவும் இல்லை என்பதனை நிரூபணம் ஆக்கிய உங்களுக்கு வாழ்த்துகள்!.

மகிழ்ச்சி! பெரும் மகிழ்ச்சி!!

மீண்டும் சந்திப்போம்,

வணக்கம்,

தோழமைமிக்க,

**(இரா.முத்தரசன்)**
மாநிலச் செயலாளர்

## அணிவகுப்பைக் காண கண் கோடி வேண்டும்

மாற்றாரும் போற்றிடும் வண்ணம் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் புற்றீசல் போல் புறப்பட்டு வந்தனர்.

பெரியதோர் போர்ப்படை, எதிரி நாட்டின் இடையூறுகளை எதிர்கொள்ளும் ஆற்றல்மிக்க ராணுவம் அணிவகுத்து வருவதைப் போன்று, மக்கள் தொண்டரணியின் தளபதி தோழர் எம்.லகுமையா தலைமையில், சீருடை அணிந்த செந்தாண்டர்கள் கம்பீரமாய் அணிவகுத்து முன்செல்ல, அதனைத் தொடர்ந்து மாநிலச் செயலாளர் க.பாரதி தலைமையேற்று, இளம் பட்டாளம் பெரும் போர்ப்படையெனத் திரண்டது. அணிவகுத்த அனைவரது கரங்களிலும் இளைஞர் பெருமன்ற கொடி இருந்தது.

ஒரு கரத்தில் கொடி என்றால், மறுகரம் முஷ்டியை உயர்த்தி

அனைவருக்கும் கட்டணமில்லாக் கல்வி வேண்டும்
அனைவருக்கும் வேலை வேண்டும்
சர்வாதிகாரத்தை முறியடிப்போம்.
பாசிசத்தை முறியடிப்போம்.
குடியரசைக் காப்போம்.


சோசலிசம் அமைப்போம் என விண்ணதிர முழக்கமிட்டபடி அணிவகுத்ததைக் காண, கண் கோடி வேண்டும்.

# குடியரசுக்கு அச்சுறுத்தல்கள்



டி. ராஜா

**“இந்தியா 1950 ஜனவரி 26ம் தேதியிலிருந்து, மக்களால், மக்களுக்காக, மக்களால் உருவாக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தைக் கொண்டு இயங்கும் ஒரு ஜனநாயக நாடாக இருக்கும். அடுத்து அதன் ஜனநாயக அரசியல் சாசனம் என்னவாகும்? அதனை இந்தியாவால் பாதுகாக்குமா அல்லது மீண்டும் இழக்க நேரிடும்!” என்று 1949 நவம்பர் 25 அன்று அரசியலமைப்புச் சபையில் தனது கடைசி உரையின் போது பி.ஆர்.அம்பேத்கர் தனது அச்சத்தை வெளிப்படுத்தினார்.**




நமது குடியரசின் 75வது ஆண்டு நிறைவோடு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி துவக்கப்பட்ட நூறாவது ஆண்டையும் நாம் கொண்டாடுகிறோம். இது ஆழ்ந்த சிந்தனைக்கான தருணம். இன்று, குடியரசை வரையறுக்கும் கோட்பாடுகளும், நம் அனைவரது எதிர்காலமும் கடுமையான அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் அரசியலமைப்பின் விழுமியங்களைப் பாதுகாப்பதில் முன்னணியில் இருந்து வருகிறது. மேலும் அது வரைவு செய்வதிலேயே குறிப்பிடத்தக்கப் பங்களிப்புச் செய்திருக்கிறது. அரசியல் சாசனத்தை உருவாக்கியவர்கள் முன்வைத்த மதச்சார்பற்ற அரசு எனும் கோட்பாட்டை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாக ஆதரித்து நிற்கிறது. “இந்து ராஜ்ஜியம் எனும் கருத்து நாட்டிற்கு மிகப்பெரிய பேரழிவாக இருக்கும்” என்று அம்பேத்கர் எச்சரித்தார். அதே நேரத்தில், சோசலிசம் எங்கள் தொலைநோக்கு இலக்காக இருந்தது. இந்திய மக்களிடையே வருமானத்திலும், சொத்துக்களிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க வேண்டும் என்ற அரசியல் சாசனத்தின் வழிகாட்டும் கோட்பாடு, சோஷலிச இலட்சியத்துக்கு இணங்கியதாகும். ஆகவே அதன் நோக்கம் அரசியல் சுதந்திரம் மட்டுமே அல்ல, பொருளாதார மற்றும் சமூக நீதியையும் உள்ளடக்கியதாகும்.

இந்தியாவின் பன்முகத்தன்மையைக் கருத்தில் கொண்டு, அரசியல் சாசனத்தை உருவாக்கியவர்கள் நமக்கு ஒரு கூட்டாட்சி அரசியலை வழங்கினர். மொழிவாரியாக மாநிலங்களை மாற்றியமைப்பதிலும், அதிகாரத்தைப் பரவலாக்குவதிலும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் முன்னணியில் இருந்தது. மதச்சார்பின்மை, மக்கள் நலம், கூட்டாட்சி கொள்கைகள் இந்திய அரசின் கட்டமைப்பில் பின்னிப் பிணைந்துள்ளன. ஆனால் இன்று, இந்தக் கொள்கைகள் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவதைக் காண்கிறோம்.

மதப் பெரும்பான்மைவாதத்தின் எழுச்சி இன்று குடியரசுக்கு மிகவும் கடும் அச்சுறுத்தலாகி இருக்கிறது. இது இந்தியா ஒரு பன்முகச் சமூகம் என்ற அடித்தளக் கருத்தின் மதிப்பைக் குறைக்கிறது.

“இந்து முஸ்லீம் பிரச்சினையை வலுக்கட்டாயமாக்கி, முஸ்லிம்கள் அடிபணியச் செய்வதற்காக எடுக்கப்படும் முயற்சிகளை முறியடிக்கும் பணிகளில் இந்த நாடு நிரந்தரமாக ஈடுபடும்.” என அம்பேத்கர் எச்சரித்தார். சமீபத்திய ஆண்டுகளில் நடந்த கொடூரமான கும்பல் படுகொலைச் சம்பவங்களால் முஸ்லிம்கள் ஆபத்தான சூழ்நிலையை எதிர்கொள்கின்றனர். மதச்சார்பின்மை மீதான இந்தத் தாக்குதல்கள், 1991 ஆம் ஆண்டு வழிபாட்டுத் தலங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தைத் தொடர்ச்சியாக மீறுபவையாகும்.

பொருளாதாரச் சமத்துவமின்மை அதிகரித்துக் கொண்டே வருவது, குடியரசுக்கு இன்னொரு முக்கிய அச்சுறுத்தலாகும்.

அரசியல் சாசனத்தின்படி, ஒரு நலஅரசின் தொலைநோக்குப் பார்வை, அரசியல் ரீதியானது மட்டுமல்ல, பொருளாதார ஜனநாயகத்தையும் உறுதி செய்வதும் அதன் கடமையாகும். இருப்பினும், இன்று, ஒரு சிலரின் கைகளில் செல்வம் குவிந்து கொண்டே செல்வதை நாம் பார்க்கிறோம். இதுவும் ஒரு சமூக மற்றும் அரசியல் பிரச்சினையாகும். நாடு அடைந்து வரும் வளர்ச்சியினால் கிடைக்க வேண்டிய நன்மைகளில் இருந்து, விளிம்புநிலை மக்கள் முற்றிலும் ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். இது அமைதியின்மையை அதிகரித்து, வகுப்புவாத அரசியலுக்கு வளமான நிலத்தை உருவாக்குகிறது, அங்கு ஏழைகள் வர்க்க நலன்களை விட மத அடையாளத்தின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் எதிராக இன்று மோதிக் கொள்ள ஆயத்தப்படுத்தப்படுகிறார்கள்.

மேலும், பாஜக ஆர்எஸ்எஸ் ஆட்சியின் கீழ் இந்தியாவின் கூட்டாட்சி முறைமை பாழ்படுத்தப் படுகிறது.

## கடுமையான அச்சுறுத்தல்கள்

நமது குடியரசின் 75வது ஆண்டு நிறைவோடு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி துவக்கப்பட்ட நூறாவது ஆண்டையும் நாம் கொண்டாடுகிறோம். இது ஆழ்ந்த சிந்தனைக்கான தருணம். இன்று, குடியரசை வரையறுக்கும் கோட்பாடுகளும், நம் அனைவரது எதிர்காலமும் கடுமையான அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன.

அரசியலமைப்பின் முதலாவது பிரிவு, இந்தியாவை மாநிலங்களின் ஒன்றியம் என்று அறிவிக்கிறது. ஆனால், மாநில அதிகாரங்களுக்கு உட்பட்ட விஷயங்களில், ஒன்றிய அரசு சட்டங்களை இயற்றி முடக்குகிறது. ஜனநாயக வழிமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசாங்கங்களின் மதிப்பையும் செயல்பாட்டையும் குறைப்பதற்கு, காலனி அடிமைக் காலத்தில் உருவாக்கப்பட்ட ஆளுநர் பதவியைத் தவறாகப் பயன்படுத்துகிறது.

கூட்டாட்சி முறைமை என்பதன் சாரத்தை அரிக்கும் வகையில், அதிகாரங்கள் அனைத்தையும் மையப்படுத்துகிறது. இதன்மூலம் பண்பாடு, மொழி, மதத்தைத் திணிக்கிறது. மாநிலங்களின் சுயாட்சியை மேலும் நீர்த்துப்போகச் செய்வதற்காக “ஒரு நாடு, ஒரு தேர்தல்” என்ற திட்டத்தை முன்னெடுக்கிறது.

## அரசியல் சாசனத்தின் ‘நலஅரசு’

அனைவருக்கும் வாழ்வாதார வழிகளை வழங்குவதற்கும், வருமானம் மற்றும் வாழ்க்கைத் தகுதியில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்குமான பொறுப்பு முற்றிலும் அரசிடம் உள்ளது. பொதுச் சொத்துகளைத் தனியார்மயமாக்குதல், தொழிலாளர் உரிமைகளைப் பலவீனப்படுத்துதல் மற்றும் பெருநிறுவனங்களின் விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றுதல் போன்ற தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள், இந்தப் பிரச்சினைகளை அதிகப்படுத்தியுள்ளன.

இத்தகைய மக்கள் விரோதக் கொள்கைகளை எப்போதும் எதிர்த்து நிற்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, அரசியல் சாசனத்தின் ‘நலஅரசு’ எனும் முக்கியக் கோட்பாட்டை முழுமையாக மீட்டெடுக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறது.

இன்று வலதுசாரி, வகுப்புவாத அரசியல் மற்றும் சலுகை சார் முதலாளித்துவம் ஆகியவை அரசியல் சாசனத்தின் நோக்கங்களையும் விழுமியங்களையும் வெட்டிக் குறைக்கின்றன. ஒரு நெருக்கடியை நாம் எதிர்கொள்கிறோம்.

இந்திய மக்களின் முன்னேற்றத்திற்கான குடியரசை மீண்டும் நிலைநிறுத்துவதற்கான போராட்டத்தில் இணையுமாறு ஒவ்வொரு குடிமகனையும், ஒவ்வொரு முற்போக்கான சக்தியையும், ஒவ்வோர் உண்மையான தேசபக்தரையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அழைக்கிறது.

நமது அரசியல் சாசனத்தின் தொலைநோக்குப் பார்வையிலிருந்து உத்வேகம் பெற்று, அது அனைவருக்கும் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் கண்ணியத்தையும் உறுதி செய்யும் ஓர் உயிருள்ள ஆவணமாக நிலைப்பதை உறுதிசெய்யப் பாடுபடுவோம்.

தமிழில் டி.எம்.மூர்த்தி

---

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

தோழர்கள் பணியாற்றினர்.

இளைஞர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் துரை அருள்ராஜன் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். வரவேற்புக்குழு தலைவர் ந. நஞ்சப்பன் வரவேற்புரையாற்றினார். இளைஞர் பெருமன்ற அகில இந்தியத் தலைவர் சுக்ஜிந்தர் மகேசரி மாநாட்டைத் தொடங்கி வைத்து உரை நிகழ்த்தினார். பொதுச் செயலாளர் இரா. திருமலை சிறப்புரையாற்றினார். இளைஞர் பெருமன்ற கர்நாடக மாநிலத் தலைவர் ஹரிஷ் பாலா, இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாநில செயலாளர் ஏ.வி. சிங்காரவேலன், மாணவர் பெருமன்ற அகில இந்திய பொதுச் செயலாளர் சீ. தினேஷ், மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் பா. தினேஷ், மாநிலத் தலைவர் க.இப்ராகிம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாநாட்டில் கடந்த ஆறு ஆண்டுகால அரசியல் அமைப்பு நிலை வேலை அறிக்கையினை மாநிலச் செயலாளர் க.பாரதி முன்வைத்தார். பிரதிநிதிகளின் விவாதங்களுக்குப் பிறகு மாநிலச் செயலாளர் தொகுப்புரைக்கு பின் ஒருமனதாக ஏற்கப்பட்டது. வரவு செலவு அறிக்கையை மாநிலச் பொருளாளர் சிவாஜி காந்தி முன்வைத்தார். ஒருமனதாக ஏற்கப்பட்டது.

மாநாட்டில் கலந்துகொண்ட இளைஞர் பெருமன்ற முன்னாள் மாநிலத் தலைவர்கள் லெனின், கே.பி.கந்தசாமி, வ.பாலமுருகன், பெ.முருகேஷ், லி.உதயகுமார் உள்ளிட்டோருக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் திரு.வி.க. விருது பெற்ற சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் கௌரவிக்கப்பட்டார்.

திரைக்கலைஞர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. திரையில் வளரும் துளிர்களான பொம்மை நாயகி பட இயக்குனர் ஷான், பராரி பட இயக்குனர் எழில் பெரியவேடி, அரிசி பட இயக்குனர் எஸ்.ஏ.விஜயகுமார், ஒளிப்பதிவாளர் ஜி.முரளி, நடிகர் சிங்காரவேலன், உள்ளிட்டோருக்கு விருதுகள் வழங்கி ஜனசக்தி ஆசிரியர் டி.எம்.மூர்த்தி அவர்கள் பாராட்டு உரையாற்றினார்

மாநாட்டில் 75 பேர் கொண்ட புதிய மாநிலக் குழு தேர்வு செய்யப்பட்டது. மாநாட்டில் புதிய நிர்வாகிகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் வாழ்த்தினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் நிறைவுறையாற்றினார்.

நிறைவாக கடந்த ஆறு ஆண்டுகளில் மாநில நிர்வாகிகளாக சிறப்புடன் செயல்பட்டு இம்மாநாட்டில் பொறுப்புகளில் இருந்து விடைபெற்ற த.கு.வெங்கடேசன், கு. ராஜேந்திரன், வே.வசந்தகுமார், துரை.அருள் ராஜன், உ.சிவாஜி காந்தி, சி.செந்தில்குமார் ஆகியோருக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மாநாட்டில் வெளியிடப்பட்ட ஏ.ஐ.ஒய்.எப் வரலாற்றுப் படங்கள் ஆவணப் படத்தையும் இளைஞர் பெருமன்ற பாடல்களையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலத்துணைச் செயலாளர் நா.பெரியசாமி வெளியிட்டு உரையாற்றினார். தர்மபுரி நகரம் முழுவதும் சுவர்விளம்பரங்கள், டிஜிட்டல்விளம்பரங்கள், கொடி தோரணங்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து மாநாட்டைச் சீரும் சிறப்புடன் நடத்திய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தர்மபுரி மாவட்ட குழுவுக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. வரவேற்புக் குழு பொருளாளர் எஸ். தேவராஜன் நன்றி உரையாற்றினார்.

மாநாட்டில் ரஞ்சனி கண்ணம்மா தலைமையிலான மினிட்ஸ் குழுவும், மௌ.குணசேகர் தலைமையிலான தீர்மானக் குழுவும் எம்.செல்வகுமார் தலைமையிலான தகுதி ஆய்வுக்குழுவும், இரா.ரமேஷ் தலைமையிலான உணவுக் குழுவும் சிறப்புடன் பணியாற்றியது.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 87 இதழ் 44

# முதலாளிகளிடம் வசூலிக்கப்படாத வருமான வரி ரூ.19.36 லட்சம் கோடி!

அம்பேத்கரைப் பற்றி அமித்ஷா நாடாளுமன்றத்தில் அவதூறு பேசிய 2024 டிசம்பர் 17ஆம் தேதி. கண்டனம் தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டு, வெளிநடப்பு செய்த நேரம்.

அப்போது, ஒன்றிய அரசின் நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் ராய் சவுத்ரி, இந்திய தலைமை கணக்குத் தணிக்கையாளரின்(சிஏஜி) 14வது அறிக்கையை ஓசைப்படாமல் நாடாளுமன்றத்தில் வைத்தார். அது யார் கவனத்திலும் படவில்லை. ஊடகங்களும் உடனடியாக அதைப்பற்றி பேசவில்லை.

அது 230 பக்கங்களைக் கொண்ட அறிக்கை. கார்ப்பரேட்டுகளுக்கும், உயர் வருமானம் கொண்ட பெருந்தனக்காரர்களுக்கும் விதிக்கப்பட்ட வருமான வரி நிலுவைத் தொகைகள் அதிகரித்துக் கொண்டே செல்வது பற்றிய அதிர்ச்சியூட்டும் விவரங்களை அந்த அறிக்கை எடுத்துக் கூறியிருக்கிறது. ரூ19.35 லட்சம் கோடி ரூபாயை வசூலிக்க அரசு தவறி உள்ளது!

நவம்பர் 2020 முதல் ஜனவரி 2023 வரை, உயர் வருவாய் நபர்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்ட வருமான வரித்துறை அதனை வசூலித்து, மீட்டெடுப்பது தொடர்பாக, வருமான வரி துறையின் செயல் திறனை இரண்டு கட்டங்களாக சிஏஜி தணிக்கை செய்தது.

முதலாவதாக, கார்ப்பரேட்டுகள் வைத்துள்ள வருமானவரி பாக்கி, ஒட்டுமொத்தமாக வசூலிக்கப்பட்டதை விட அதிகமாக இருக்கிறது. இரண்டாவதாக ‘மீட்டெடுப்பது கடினம்‘ என்று துறை வகைப்படுத்திய நிலுவைத் தொகை அந்த ஆண்டுகளில் கணக்கிடப்பட்ட மொத்த நிலுவைத் தொகையில் 97%க்கும் அதிகமாக இருந்தது.

தணிக்கை தொடங்குவதற்கு முன்பு, பல ஆண்டுகளாக ஒன்றிய நிதி அமைச்சகத்தின் வரவு குறித்த தரவுகளை பகுப்பாய்வு செய்ததன் மூலம் சிஏஜி இந்தப் போக்கைக் கண்டறிந்ததாகத் தெரிகிறது.

உதாரணமாக, 2016 17ல், வசூலிக்கப்பட்ட மொத்த வருமான வரி மற்றும் கார்ப்பரேட் வரி ரூபாய் 8.5 லட்சம் கோடி ஆகும். ஆனால் வசூல் ஆகாத தொகை ரூபாய் 10.44 லட்சம் கோடி! இதில் ரூ.10.3 லட்சம் கோடி ‘மீட்டெடுக்க முடியாத தொகை’ என்று வருமான வரித்துறை கூறிவிட்டது!

அதுவே 2021 22ல், வசூலித்த தொகை ரூ.14.12 லட்சம் கோடி.ஆனால் வசூலிக்கப்படாத தொகை ரூ.19.35 லட்சம் கோடி! இவை பற்றி மிக விரிவாக அட்டவணைகளோடு அறிக்கை விவரங்களை தந்துள்ளது.

அதோடு மட்டுமின்றி, நிலுவை வைத்துள்ள நிறுவனங்களைப் பற்றிய தரவுகளை தணிக்கைக்கு கோரிய போது, வருமான வரித்துறை சரியாக ஒத்துழைக்கவில்லை என்பதையும் சுட்டி காட்டி இருக்கிறது.

ரூ. 7.59 லட்சம் கோடி நிலுவை வைத்துள்ள 18,870 நிறுவனங்களைப் பற்றிய விபரங்களை கோரிய போது, 10,896 நிறுவனங்களின் விவரங்களை மட்டுமே கொடுத்தது என்றும், வருமானவரித்துறை தராத 8,080 நிறுவனங்கள் தான் ரூ.6 லட்சம் கோடி வரை பாக்கி வைத்துள்ளன என்றும் அறிக்கை கூறுகிறது.

வருமான வரி விதித்த பின்பு, அதனை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் நிறுவனங்கள், விதிக்கப்பட்ட வரியில் 15 முதல் 20% கட்டிய பின்பு தான் மேல்முறையீடு செய்ய முடியும். மேல்முறையீடு செய்த 3400 நிறுவனங்களில், 382 மட்டும்தான் இந்த தொகையை கட்டியுள்ளன.

மற்றவர்களிடமிருந்தும் வருமான வரித்துறை சட்டப்படியான தொகையை வசூலித்திருக்க வேண்டும், அல்லது தொகை கட்டாததால் மேல்முறையீடு செல்லாது என்று வாதிட்டு இருக்க வேண்டும். இரண்டையுமே செய்யவில்லை!

மேல் முறையீடும் செய்யவில்லை, நீதிமன்ற தடையும் தரவில்லை என்ற நிலையில் உள்ள 3.32 லட்சம் கோடி ரூபாயை வசூலிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதே நேரத்தில் மாத ஊதியம் பெறும் ஊழியர்களிடம் சரியான வரித்தொகை சம்பளத்திலேயே பிடிக்கப்படுகிறது. இவர்களுக்கு சம்பளம் இல்லாமல், வங்கி வைப்புத் தொகை போன்றவற்றிலிருந்து வட்டி வரும் என்பதால், முன்கூட்டியே ‘அட்வான்ஸ் வரி’ வேறு வசூலிக்கப்படுகிறது. ஆனால் முதலாளிகள் கட்டாமல் விட்டால், ‘மீட்டெடுக்க முடியாத தொகை’ என்று வருமான வரித்துறை அவர்களுக்கு ஒத்துழைக்கிறது.

சரியாக வசூலிக்கப்படாததால், வருவாய் குறைவு என காரணம் காட்டி கல்வி, மருத்துவம், விவசாயிகளுக்கான மானியங்கள், பெண்கள் குழந்தைகள் நலம், கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம் உள்ளிட்டவற்றுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு குறைக்கப்படுகிறது.

பட்ஜெட் யானை பின்னால் வருகிறது. அதன் ஊழல் மணியோசை முன்பாகவே வந்து விட்டது!




# டீப் சீக்: அமெரிக்காவைப் புரட்டிப் போட்ட சீனா!



மு.வீரபாண்டியன்

இது அறிவியல் தொழில்நுட்ப யுகம். அதிலும் செயற்கை நுண்ணறிவு காலம்.

நமது கரங்களில் தவழும் செல்போன் துவங்கி, கம்ப்யூட்டர், விண்வெளி ஆய்வுகள் என யாவும் செயற்கை நுண்ணறிவு (AI) artificial intelligency.

இந்தத்துறையில்இதுநாள்வரை அமெரிக்காவின் ‘சிலிகான்’ தான் கோலோச்சியது.

மைக்ரோ, ஆப்பிள், பேஸ்புக், இன்ஸ்டாகிராம், யூனிகான்ஸ் என இன்னும் பல.

பல லட்சம் கோடியில் கட்டமைப்பு. இதில் ‘சிப்’ மிகப் பெரிய பங்காற்றுகிறது. இதன் உற்பத்தியில் தைவான் முதலிடம் வகிக்கிறது.

இதுநாள் வரை சீனா தைவான் சிம் வர்த்தகம் இருந்தது. சீனாவின் உறவைத் துண்டித்து, தைவானை இணைத்துக் கொண்டது அமெரிக்கா.

இதனை ‘சிப்’ போர் என்று செயற்கை நுண்ணறிவு உலகம் வர்ணித்தது.

எப்படி முயன்றும் அமெரிக்கா, தைவான் இடத்தை சீனா நெருங்க முடியாது என்றனர்.

அமெரிக்க நுண்ணறிவு பரிமாற்றம் என்பது ஐரோப்பாவுடன் நிறுத்திக் கொண்டது அமெரிக்கா.

செயற்கை நுண்ணறிவில் இந்தியர்களும், குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மிக, மிக திறமையானவர்கள்.

ஆனால், இவர்களில் பலர் இருப்பது இந்தியாவில் அல்ல, அமெரிக்காவில், ஐரோப்பாவில். எந்தச் சூழலிலும் இவர்களை அமெரிக்கா வெளியே அனுப்பாது.

‘கிரீன் கார்ட் சிஸ்டம்’ எல்லாம் இங்கே பேசாது.

சரி தற்போது என்ன? உலகம் எதைப் பேசுகிறது? அமெரிக்காவும், ஐரோப்பாவும் அலறுவது ஏன்?

அதுதான் டீப் சீக் எனும் சீனாவின் செயற்கை நுண்ணறிவு கண்டுபிடிப்பு.

இதுநாள் வரை உலகில் கோலோச்சிய அமெரிக்கா “ஓபன் AI Tool” என்பதுதான்.

ராணுவ ரகசியங்கள், உலகம் அறிய முடியாத உளவு வேலைகள், பல பொழுதுபோக்குகள் என யாவும் இந்த AI Tool-™ அடக்கம்.

ஆனால் சில மாதங்களிலேயே மிக மிகக் குறைந்த செலவில், அதாவது அமெரிக்கா செயற்கை நுண்ணறிவுக்கு 100 ரூபாய் செலவு செய்கிறது என்றால், சீனா செய்திருப்பது வெறும் 5 ரூபாய். டீப் சீக் அமெரிக்கா என நாம் கூறினால், நிமிடத்தில் அமெரிக்கா வரலாற்றை அப்படியே தருகிறது.

ஒரு வரி எழுதினால் போதும் அல்லது ஒரு வரி பேசினால் போதும், ஒட்டுமொத்த அமெரிக்காவைப் புரட்டி எடுக்கிறது டீப் சீக்

சீனாவின் இந்தப் புதிய கண்டுபிடிப்பை அமெரிக்கா, ஐரோப்பிய செயற்கை நுண்ணறிவு பிரிவு வியந்து பார்க்கிறது.

இன்னும் 50 ஆண்டுகள் முன்னேற வேண்டிய இந்த நுண்ணறிவு குறைந்த செலவில், சீனாவுக்கு எப்படிச் சாத்தியப்பட்டது என உலகமே விவாதிக்கிறது.

சீனாவின் நுண்ணறிவு, அதன் விண்வெளி ஆய்வுகளில் வெளிப்படுவதாக ‘சிலிக்கான்’ விண்வெளிப் பிரிவு முன்னரே தெரிவித்தது.

அமெரிக்காவோடு எவராலும் நெருங்க முடியாது என்ற அமெரிக்கக் கப்பற்படை கணிப்பையும் சீனா உடைத்து விட்டது. இன்று நவீனக் கப்பற்படையில் சீனா முதலிடம், அமெரிக்கா பின்தங்கி விட்டது என்பதை அமெரிக்கா ஏற்க மறுக்கிறது.

டீப் சீக் பற்றி உலகம் உரையாடல் செய்யும் தருணத்தில்.

அமெரிக்கா, ஐரோப்பா, தைவான் நுண்ணறிவு வல்லுநர்கள் உறைந்து விட்டனர். சீனாவின் இந்தக் கண்டுபிடிப்பினால் பங்குச் சந்தை குளோஸ், லட்சக்கணக்கான ட்ரில்லியன் இழப்பு, மான்செட், விவர்ஸ் அதன் பார்வையாளர்கள் என யாவும் வீழ்ந்துவிட்டது.

சீனாவின் இந்தக் கண்டுபிடிப்பு உண்மையா என அமெரிக்க அதிபரும், அமெரிக்கா ராணுவத் தலைமையும் சிலிக்கானைக் கேட்கிறது. சிலிக்கான் அதாவது அமெரிக்காவின் நுண்ணறிவு தலைமை, ஆம்! என்கிறது. அத்தோடு இந்த முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றது மாணவர்களும், இளைஞர்களும், அதுதான் மேலாதிக்க நாடுகளால் ஏற்க முடியவில்லை.

அமெரிக்காவும், ஐரோப்பாவும் விவிலியக் கதையின் ‘டேவிட்’ “கோலியத்” போல் ஒப்பீடு செய்கிறார்கள். மிகச் சாதாரண ஆடு மேய்ப்பவன் டேவிட், வெல்ல முடியாத திமிர் பிடித்தவன் கோலியத்!

அவனைச் சிறுவன் டேவிட் வீத்தியது கதை. அப்படித்தான் அமெரிக்காவின் வெல்ல முடியாத சிலிக்கானை, சீனா வீழ்த்தி விட்டதாகக் கூறுகின்றார்கள்.

இனி அமெரிக்காவும், மேற்கு உலகமும் தூங்காது. எப்படியாவது சீனாவை வீழ்த்த வேண்டும். வரும் நூற்றாண்டு ஆசியாவின் பக்கம் சென்றுவிடக் கூடாது.

ஆனாலும் வரும் நூற்றாண்டு ஆசியாவின் நூற்றாண்டுதான்.

## வினாடி - வினா

1 கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூன்றாவது பேராயம் (காங்கிரஸ்) எப்பொழுது நடைபெற்றது?

2 மூன்றாவது பேராயத்தில் எத்தனை நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் பங்கேற்றனர்?

3 மூன்றாவது பேராயத்தில் எந்தப் பொறுப்புக்கு எம்.என்.ராய் தேர்ந்தெடுக்கப்பட்டார்?



4 பெண்கள் தொடர்பாக மூன்றாவது பேராயம் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்திய ஆய்வறிக்கை எது?

5 பெண்கள் தொடர்பான ஆய்வறிக்கையைத் தயாரித்தது யார்?

6 மகளிர் தொடர்பான ஆய்வறிக்கை தயாரிப்பதற்கான விவாதங்கள் மேற்கொண்டது யார்?

விடைகள் 12 ஆம் பக்கம்



மே.து.ரா.

**இரும்பின் தொன்மை குறித்த அண்மைக் கால ஆய்வு முடிவுகள், தமிழ்ப் பண்பாட்டின் பழமையினை முற்றிலுமாகத் தெளிவுபடுத்திவிட்டன.**



# இரும்பின் தொன்மை: சிந்துவெளிக்கு முன் செல்லும் பண்டைத் தமிழ்ப் பண்பாடு

23.01.2025 அன்று தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பும், அதனையொட்டி வெளியிடப்பட்ட ‘இரும்பின் தொன்மை’ என்ற நூலும், நூறாண்டுகளுக்கு மேலாக நிலவிவந்த பல கருத்தமைவுகளைப் புரட்டிப்போட்டுவிட்டன.

தமிழகத்தில் ஆதிச்சநல்லூர் (தூத்துக்குடி மாவட்டம்), கொடுமணல் (ஈரோடு), பொருந்தல் (திண்டுக்கல்), கீழடி (சிவகங்கை), மாங்காடு (சேலம்), கீழநமண்டி (திருவண்ணாமலை), மயிலாடும்பாறை (கிருட்டிணகிரி), சிவகளை (தூத்துக்குடி) ஆகிய இடங்களில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அடுத்தடுத்து நடைபெற்ற அகழ்வுகள் தமிழக வரலாற்றில் புதிய ஒளியினைத் தொடர்ந்து பாய்ச்சி வருகின்றன.

தமிழ்நாட்டில் மட்டும் 3000க்கும் மேற்பட்ட இரும்புக் காலத்தைச் சேர்ந்த ஈமம் தொடர்பான இடங்கள் கிடைத்துள்ளன. இவற்றில், 1362 முதுமக்கள் தாழிகள், 996 பரல் உயர் பதுக்கைகள், 225 கல் வட்டங்கள், 634 வாழ்விடத்துடன்கூடிய ஈமக் காடுகள் ஆகியன அடங்கும். இவற்றில் மிகச் சில இடங்களில் மட்டுமே இதுவரை அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டரசின் தொல்லியல் துறை, ஒன்றிய அரசின் தொல்லியல் துறை, சில பல்கலைக்கழகங்கள் ஆகியன இத்தகைய அகழ்வு முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றன. ஒன்றிய அரசின் முழுமையான ஒத்துழைப்பு இல்லையென்றாலும், தமிழக அரசின் முன்னெடுப்புகளால் இந்த அகழ்வுகள் செம்மையாக நடத்தப்பட்டு வருகின்றன.

ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்தான் தமிழ்நாட்டில் இரும்பு பயன்பாட்டுக்கு வந்தது என்றுதான் நீண்ட காலமாக நம்பப்பட்டு வந்தது. இதனை அடுத்தடுத்த அகழ்வு முடிவுகள் மாற்றியமைத்துள்ளன.

மாங்காடு (மேட்டூர் வட்டம்) என்ற இடத்தின் அகழ்வில் கிடைத்த இரும்பு வாளினை ஆய்வு செய்தபோது கி.மு. 1510ஆம் ஆண்டினைச் சார்ந்ததாக மதிப்பிடப்பட்டது. கீழநமண்டி (வந்தவாசி வட்டம்) அகழ்வில் பெற்ற இரும்பின் காலம் கி.மு. 1692 என்றானது. மயிலாடும்பாறையில் கிடைத்த இரும்பின் காலம் கி.மு. 2172 என்று முடிவானதால், இரும்பின் பயன்பாடு மேலும் முன் சென்றது.

அடுத்து, ஆதிச்சநல்லூர் அகழ்வின் இரும்பினை ஆய்வு செய்தபோது, காலவரையறை கி.மு. 2522 முதல் 1613 வரை பின்னுக்கு சென்றது

இந்த நிலையில்தான் சிவகளை அகழ்வுகள் சிறப்பானதொரு கட்டத்தை எட்டியுள்ளன. இங்குக் கிடைத்த இரும்புப் பொருள்கள் 85க்கு மேலாக உள்ளன. இந்த இரும்புப் பொருள்களின் காலம் கி.மு. 2953 முதல் கி.மு. 3395 வரை இருந்தது தெரியவந்துள்ளது.

இதனால், தமிழ்நாட்டில் இரும்புப் பயன்பாட்டின் காலம் கி.மு. 3395 என்ற அளவிலேயே இருந்திருப்பது தெளிவாக உறுதிசெய்யப்பட்டுள்ளது.

உலகெங்கும் கிடைத்துள்ள இரும்புப் பொருள்களைக் காணும்போது, தமிழகத்தில் மட்டுமே தாதுக்களில் இருந்து தரப்படுத்தப்பட்ட பக்குவப்படுத்தப்பட்ட வகையில் அவை உள்ளன என்பது தனித்து நோக்கத்தக்கதாகும்.

உலகின் பிற பகுதிகளில் கிடைத்த தொல்பொருள்கள் யாவும், விண்கல் இரும்பிலிருந்து உருவாக்கப்பட்டவையாகவே இருந்தன. இவற்றின் பழமையான காலம் கி.மு. 3400 – 3100 என்ற அளவிலேயே இருந்ததாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால் தமிழகத்தில் கிடைத்தவை அனைத்தும் கனிமங்களிலிருந்து பக்குவப்படுத்தப்பட்டவை என்பதை வேறுபடுத்திக் காணவேண்டும்.

பேராசிரியர் கா. ராசன், திரு.இரா. சிவானந்தன் ஆகியோர் தலைமையிலான குழுவினர், தங்களது அகழ்வு முடிவுகளைச் செம்மையாக உருவாக்கி, உறுதிப்படுத்தியிருக்கிறார்கள் என்பது போற்றுதலுக்கு உரியதாகும்.

பொதுவாக, ஏதோவொரு ஆய்வகத்திற்குத் தந்து முடிவுகளைப் பெறுவதற்கு மாறாக, மூன்று வெவ்வேறு ஆய்வகங்களிலிருந்து முடிவுகள் காணப்பட்டுள்ளன. அமெரிக்காவின் பிளாரிடோ மாநிலத்தில் உள்ள பீட்டா பகுப்பு ஆய்வகம், கதிரியக்கக் காலப் பகுவாய்வு செய்வதில் முன்னிடம் பெற்றதாகும். அடுத்து, தூண்டொளி வழிக் காலக் கணக்கீடு செய்ய, லக்னோ நகரில் உள்ள பீர்பால் சகானி தொல் அறிவியல் ஆய்வு நிறுவனமும் அகமதாபாத்தில் உள்ள இயற்பியல் ஆய்வகமும் முன்னிலை கொண்டவையாகும்.

இரண்டு வகையான ஆய்வு முறைகளைச் செய்ய, மூன்று வேறுபட்ட ஆய்வகங்களுக்கு அனுப்பி முடிவுகள் பெறப்பட்டுள்ளன. ஏறக்குறைய ஒன்றுபட்ட காலக் கணக்கீடுகளையே அவை வழங்கியுள்ளன என்பது தற்போது கிடைத்துள்ள முடிவுகளின் தனிச் சிறப்பாகும்.

எனவே, சிவகளையில் கிடைத்துள்ள இரும்பின் பயன்பாடு கி.மு. 3345 என்ற கால அளவிலானது என்பது அய்யத்துக்கிடமின்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இரும்புக் கனிமங்களோ அல்லது பக்குவப்படாத இரும்போ மட்டும் தமிழகத்தின் அகழ்வுகளில் கிடைத்திருக்கவில்லை. அவை யாவும் 1200 முதல் 1400 செல்சியசு அளவிலான சூட்டில் வடித்தெடுக்கப்பட்ட பொருள்களாகவே இருக்கின்றன.

எடுத்துக்காட்டாக, மாங்காடு அகழ்வில் இரும்பு வாள் இருந்தது. ஆதிச்சநல்லூரில் இரும்பு மண்வெட்டி போன்ற பொருள்கள் கிடைத்துள்ளன. சிவகளையில் இரும்பினாலான கத்திகள், அம்பு முனைகள், உளிகள், கோடாரிகள்,



வாள்கள், மண்வெட்டிகள், மோதிரங்கள் போன்ற பயன்பாட்டுப் பொருள்களும் உற்பத்திக் கருவிகளும் கிடைத்துள்ளன

தமிழ்நாட்டின் அகழ்வுகளில் கிடைத்துள்ள பொருள்களில் இரும்பு மட்டுமே இருக்கவில்லை. மயிலாடும்பாறையில் பாறை ஓவியங்கள், வணிகக் குழுக்களின் கல்வெட்டு, தமிழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானையோடுகள் போன்றவையும் உள்ளன. ஆதிச்சநல்லூரில் தாய்த் தெய்வம் என்று கருதப்படும் உருவம், தங்க மோதிரம், வெண்கலப் பொருள்கள், நெல்மணிகள், பிற உற்பத்திப் பொருள்கள் ஆகியனவும் அகழ்வில் எடுக்கப்பட்டுள்ளன.

ஆதிச்சநல்லூரில் கிடைத்த நெல்மணிகளின் காலம் கி.மு.1149 என்று தெரியவந்துள்ளது. பிற உற்பத்திப் பொருள்களின் காலம் கி.மு.1441 ஆகும். சிவகளையில் பெற்ற நெல்மணிகளின் காலம் கி.மு.1155 என முடிவு கிடைத்துள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் பொருந்தல் அகழ்வில் எழுத்துக்களுடன் கூடிய இரு பானைகளில் இருந்த நெல் மணிகளின் காலங்கள் கி.மு. 490 எனவும் கி.மு.450 எனவும் கண்டறியப்பட்டிருந்தன.

இவற்றைக் கொண்டு பண்டைய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இலக்கியங்களின் காலம் கி.மு.5ஆம் நூற்றாண்டளவில் இருக்கவேண்டும் என்ற முடிவு முன்வைக்கப்பட்டது. அதேபோன்று, நெல்மணிகள் இருந்த பானைகளில் கிடைத்த எழுத்துப் பொறிப்புகளின் காலமும், அசோகரது பிராமி எழுத்துக்களுக்கு முந்தையதென உறுதிப்படுத்தப்பட்டது. அடுத்து, கீழடி அகழ்வு பண்டைய பாடல்களின் காலத்தை கி.மு.6ஆம் நூற்றாண்டுக்குக் கொண்டுசென்றது.

ஆனால், தற்போது சிவகளையில் கிடைத்த எழுத்துப் பொறிப்புகளின் காலம் கி.மு.685 என்று முன் செல்கிறது. நெல்மணிகளின் காலம் சிவகளை அகழ்வின் அடிப்படையில் கி.மு.1155 என்று எடுத்துக் கொண்டாலும், ஆதிச்சநல்லூர் அகழ்வின் அடிப்படையில் கி.மு.1149 என்று எடுத்துக்கொண்டாலும், இரண்டு கால அளவுகளும் பெரிதும் வேறுபட்டிருக்கவில்லை.

எனவே, தமிழ்நாட்டின் மருத வள உற்பத்தி கி.மு. 12ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே வளர்ச்சி பெற்றிருந்தது என்பது தற்போது தெரிய வருகிறது.

இவற்றைக்கொண்டு பார்க்கும்போது, பண்டைய பாடல்கள் காட்டும் மருத நில வளர்ச்சி நிலை கி.மு. 1155 க்கு முன்னரே ஏற்பட்டுவிட்டதை அறிய முடிகிறது.

சிவகளை, ஆதிச்சநல்லூர் போன்ற அகழ்வுகளில் கிடைத்த இரும்புப் பொருள்களான மண்வெட்டி, உளி, கோடாரி, கத்தி போன்ற உற்பத்திக் கருவிகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டில் மருத வள உற்பத்தி நிலை கி.மு. 3345 என்ற அளவில் இருந்திருக்கவேண்டும் என்று கருதவேண்டியுள்ளது.

இதனால், பண்டைய பாடல்களில் காணப்படும் மருதத்தின் வளர்ச்சியும் வேளாண் நுட்பமும் கி.மு. 3345க்கு முன்னரே ஏற்பட்டிருந்த சமூகபொருளிய பண்பாட்டுக் காலத்தினை மதிப்பிட முடிகிறது.

அத்துடன், இரும்பைக் கனிமத்திலிருந்து பிரித்தெடுக்கும் நுட்பம், இரும்பைப் பண்படுத்தும் ஆற்றல் ஆகியன அறிவியல் அறிவின் உயர்நிலைகளை உறுதிப்படுத்துகின்றன. தமிழ்நாட்டில் செம்பின் பயன்பாடு குறைவாக இருந்தாலும், வெண்கலப் பொருள்கள் ஆதிச்சநல்லூர் அகழ்வில் பெறப்பட்டிருக்கின்றன. செம்புக் காலத்துக்கு முன்னர் அல்லது செம்புக் காலத்தினையொட்டி, இரும்புக் காலம் தமிழகத்தில் நிலவி வந்ததை அறியலாம்.

வரலாற்று வளர்ச்சி நிலைகளுக்கேற்ப, பண்டைய தமிழ் இலக்கியங்கள் மேம்பட்டதொரு பண்பாட்டினை வெளிப்படுத்தியிருந்தாலும், இலக்கியத் தரவுகளை அடிப்படைகளாக ஒத்துக்கொள்ள தயக்கங்கள் இருந்தன. ஆனால், தற்போதைய அகழ்வுகளின் தரவுகள் பண்டைய இலக்கியங்களின் உண்மைத் தன்மைகளைத் தெளிவாகத் தெரியப்படுத்தியிருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

பண்டைய பண்பாட்டு இருப்பிடங்களாக மெசபடோமியா (கி.மு. 4100–1750), பெரு (கி.மு. 3000–1800), எகிப்து (கி.மு. 3150–30), சிந்துவெளி (கி.மு. 3300–1300), அரப்பா (கி.மு. 3300–1300), சீனம் (கி.மு. 2020), கிரேக்கம் (கி.மு. 800–323), ரோமானியம் (கி.மு. 753–426) போன்றவை காட்சிப்படுத்தப்படுகின்றன. இந்தப் பண்பாடுகளின் கால வரையறைகள், வெவ்வேறு ஆய்வாளர்களால் மாறுபட்டுக் கூறப்பட்டிருப்பினும், ஏறக்குறைய அந்தந்தக் காலப்பகுதிகளில் நிலவியதாகவே எடுத்துக்கொள்ளலாம்.

குறிப்பாக, சிந்துவெளி அரப்பா ஆகியவற்றை எடுத்துக்கொண்டால், இவற்றின் மேல் எல்லை கி.மு. 3300 என்று அமைந்திருக்க, தமிழ்நாட்டின் சிவகளை அகழ்வின் காலக் கணக்கை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கி.மு. 3345 மேல்நிலையாக இருப்பது புறந்தள்ளக்கூடியதல்ல.

பண்டைய பண்பாட்டு இருப்பிடங்களாகக் கருதப்படும் அனைத்திலும் கட்டிடக் கட்டமைப்பின் எச்சங்கள் காணப்படுகின்றன. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அத்தகைய கட்டிடக் கட்டமைப்புகள் எதுவும் இதுவரை அகழ்ந்தெடுக்கப்படவில்லை என்பது உண்மைதான்.

ஆனால், ஒன்றினை இங்கு நினைவில் கொள்ளவேண்டும். சமூக பொருளிய பண்பாட்டு நிலைகள், உலகெங்குமுள்ள இனங்களிடையே இணையாகவும் சீராகவும் ஒன்றாகவும் இருக்கவில்லை.

கட்டிடங்கள் போன்ற கட்டமைப்பு

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது பொதுச் செயலாளர்

# டாக்டர் ஜி.அதிகாரி (1933 – 35)

### கம்யூனிஸ்ட்டான விஞ்ஞானி

கங்காதர் மோரேஷ்வர் அதிகாரி 1898 டிசம்பர் 8, அன்று மும்பைக்கு அருகிலுள்ள பன்வேலில் பிறந்தார். பம்பாய் வில்சன் கல்லூரியில் பயின்றார். பட்டம் பெற்ற பின், பெங்களூரில் உள்ள இந்திய விஞ்ஞான கழகத்தில் ஆராய்ச்சி அறிஞராக சேர்ந்தார்.

ஜெர்மன் மொழியையும் கற்றார். ஜெர்மனியின் ஹம்போல்ட் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் வேதியியலில் முனைவர் பட்டம் பெற்றார். பெரும் விஞ்ஞானியான ஐன்ஸ்டீனை சந்தித்தார், அவரது சொற்பொழிவுகளில் கலந்து கொண்டார். அவரது சக விஞ் ஞானியானார். அவரது நிறுவனத்தில் பணியாற்றினார். கட்சியில் ‘டாக்’ (Doc) என்று செல்லமாக அழைக்கப்பட்டவர்.

வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா ஜெர்மனி மற்றும் இங்கிலாந்தில் உள்ள பிற புரட்சியாளர்கள், கம்யூனிஸ்டுகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். நேரில் சந்தித்தும் விவாதித்தார்.

1928ல் ஜெர்மனி கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரானார். அதன் பொதுச்செயலாளரும், புகழ் வாழ்க சர்வதேச கம்யூனிஸ்ட் தலைவருமான ஏர்னெஸ்ட் தால்மன் கலந்து கொண்டார்.



1928ல் இந்தியா திரும்பினார். எஸ்.ஏ. டாங்கே உள்ளிட்ட கம்யூனிஸ்ட் தலைவருடன் இணைந்து பணிபுரிந்தார். பம்பாயில் புகழ்வாய்ந்த கிர்ணி காம்கார் யூனியன் (பஞ்சாலை தொழிலாளர் சங்கம்) மற்றும் தொழிலாளர் விவசாயிகள் கட்சி ஆகியவற்றில் பணியாற்றினார்.

மீரட் சதி வழக்கில் கைது செய்யப்பட்டு, தண்டனைக்கு ஆளானார். அவருடைய ஆசிரியரான விஞ்ஞானி ஐன்ஸ்டீன், அதிகாரியை விடுவிக்குமாறு பிரிட்டிஷ் அரசிடம் முறையிட்டார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக அனுமதிக்கப்பட்டார்.

கட்சி தடை செய்யப்பட்ட பிறகு, தலை மறைவாக இயங்கியது. அதன் மத்திய செயற்குழு உறுப்பினராக அதிகாரி இயங்கினார். 1933ல் கட்சியின் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். அதே ஆண்டில் சிறையில் இருந்து தப்பினார்.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தப்பிக்க திட்டம் தீட்டி நிறைவேற்றியவர். கட்சிக்குள் முரண்பட்டு புதிய உத்திகளை முன்வைத்த ‘பி.டி.ஆர்.லைன்’ (பி.டி. ரணதிவே வழி)க்கு, அவர் பொறுப்பு ஏற்றார்.

மதுரை 1953–54 ஆண்டிலும், பாலக்காட்டில் 1956ம் ஆண்டிலும் நடைபெற்ற கட்சியின் அகில இந்திய மாநாடுகளில், மத்திய செயற்குழுவுக்கு மீண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டார். 1958 இல் அமிர்தசரஸில் நடந்த மாநாட்டில், கட்சியின் அமைப்பு விதிகள் குறித்த அறிக்கையை வழங்கியவர்.

அதன் பின்னர் நடைபெற்ற மாநாடுகளிலும், தேசிய குழு மற்றும் மத்திய நிர்வாக குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1964ல் கட்சி பிளவுபடுத்தப்பட்ட பிறகு, மீண்டும் மத்திய செயற்குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். அவருக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறை ஆவணப்படுத்தும் பொறுப்பு வழங்கப்பட்டது. அதனை மிகச் சிறப்பாக நிறைவேற்றி, ஐந்து தொகுதிகளாக கொண்டு வந்தார். அரசியல் ஆய்வு மற்றும் கட்சிக்கல்வி பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.

1981, நவம்பர் 21ம் நாள் மாரடைப்பால் காலமானார்.

(அவரது வரலாற்றையும், அவர் எழுதிய மிக முக்கியமான கட்டுரைகளையும் அறிந்து கொள்ள, என்சிபிஎச் வெளியிட்ட, எம்.ஏ பழனியப்பன், டி.எம்.மூர்த்தி ஆகியோர் மொழிபெயர்த்த ‘ஒரு விஞ்ஞானியின் அரசியல் பயணம்’ என்ற புத்தகத்தைப் படிக்கலாம்.)

# உள்ளூர் கம்யூனிஸ்ட் தியாகிகளின் வீர வரலாறு

**பரமக்குடி எமனேஸ்வரத்தில் கம்யூனிஸ்ட் குடும்பங்கள் என்று அழைக்கப்படும் குடும்பங்கள் பல உண்டு. அதாவது குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினர்களாகவும் பொறுப்புகளிலும் செயல்படுவர்.**

## தோழர் ஸ்ரீதரமூர்த்தி நேர்காணல்



அத்தகைய குடும்பங்களில் ஒன்றின் மூத்த தோழர்தான் 83 வயதிலும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகளில் ஊக்கமுடன் செயல்பட்டு வரும் தோழர் எஸ்.பி.ஸ்ரீதரமூர்த்தி.

இவரது சகோதர்கள் எஸ்.பி.ராதா, எஸ்.பி.பிலேந்திரன், எஸ்பி ஜீவன்பாபு ஆகிய 4 தோழர்கள், உள்ளூர் கம்யூ.கட்சியின் பல்வேறு பொறுப்புகளில் செயல்பட்டு வருகின்றனர். குறிப்பாக தோழர் எஸ்.பி.ராதா, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் (ஏஐடியூசி) சம்மேளனப் பொதுச் செயலாளராகப் பணியாற்றியவர். கைத்தறி நல வாரியத்தின் உயர்மட்டக்குழு உறுப்பினராகச் செயல்பட்டவர்.

**◆ தாங்கள் எவ்வாறு இந்தியக் கம்யூ.கட்சியில் இணைந்தீர்கள் என்ற பின்னணியைக் கூறுங்களேன்.**

என்னுடைய தாய் மாமன் எஸ்.ஜி.லட்சுமி நாராயணன் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இருந்தார். நான் உட்பட என் சகோதரர்கள் அனைவருமே அவருடைய அரவணைப்பில் வளர்ந்தோம். அவருடைய செயல்பாடுகளையும் அதன் விளைவுகளையும் பார்த்து அறிந்தோம். தொடர்ச்சியாக ஜனசக்தி பத்திரிகை வாசிக்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. இதன் காரணமாக கம்யூனிஸ்ட் கட்சியின் மீது எங்களுக்கு ஈடுபாடு ஏற்பட்டது.

அப்போது இராமநாதபுரம் மாவட்டத்தைக் கட்சி யின் நிர்வாக வசதிக்காக கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம், மேற்கு ராமநாதபுரம் மாவட்டம் எனப் பிரித்துச் செயல்பட்டுவந்த காலம்.

கிழக்கு ராமநாதபுரத்தில் நாம் செயல்பட்டுக் கொண்டிருந்தோம். இங்கு ஆர்.எச்.நாதன், எம்.வி.சுந்தரம், கே.எம்.சுந்தரம், எம்.ஆதிமூலம் போன்றோர் செயல்பட்டுக் கொண்டிருந்தனர். ராமநாதபுரத்தில் மங்களசாமி மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தார். அவரைத் தவிர்த்து ராமநாதபுரத்தில் கம்யூனிஸ்ட் கட்சியை அடையாளப்படுத்த முடியாது என்கிற அளவிற்கு அவருடைய செயல்பாடுகள் இருந்தன.

**◆ கட்சி மக்களின் கோரிக்கைகளுக்காக நடத்திய போராட்டங்கள் குறித்து...?**

1961 ஆம் ஆண்டு குளம் புஞ்சையில் விவசாயம் செய்ய விவசாயிகளுக்குப் பட்டா வழங்கக் கோரி போராட்டம் நடைபெற்றது.

நம்முடைய பரமக்குடி தாலுகாவில் 300 தோழர்கள் கலந்துகொண்டு கைதானார்கள். எங்கள் குடும்பத்தில் என்னுடைய சகோதரர் ராதா அந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள வழி அனுப்பி வைத்தோம். நம்முடைய கைத்தறித் தோழர்கள் பலர் அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு கைதானவர்கள்.

1969 ஆம் ஆண்டு நம்முடைய மாவட்டம் நிர்வாகச் சிரமங்களை அனுபவித்துக் கொண்டிருப்பதால் முன்னேற்றம் என்பது கனவாகவே இருக்கிறது.எனவே மாவட்டத்தைப் பிரித்துப் புதிய பெயரில் மாவட்டங்கள் உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஒரு வார காலம் போராட்டங்கள் நடந்தன. அதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கைதாகி ஒரு வாரம் சிறையில் இருந்தனர். அதில் நானும் ஒரு வாரம் இருந்தேன்.

1970 இல் நடைபெற்ற நிலமீட்சிப் போராட்டத்தில் கலந்து கொண்டேன். நம்முடைய தாலுகாவில் எம்.வி கோவிந்தன் தலைமையில் கலந்து கொண்ட 70 பேரை மொத்தமாக ரயில் நிலையத்தில் காவல்துறை கைது செய்தது. ஒரு மாதக் காலம் சிறையில் இருந்தேன்.

**◆ கட்சியில் நீங்கள் பணியாற்றிய பொறுப்பைச் சொல்லுங்கள் தோழர்.**

ஜீவா நகரில் கிளை உருவாக்கப்பட்டது முதல் செயலாளராக டி.ஆர்.எம்.கோபாலகிருஷ்ணன் பொறுப்பேற்றார். 1978ல் நான் கிளைச் செயலாளராகப் பொறுபேற்றேன். பிரச்சார இலாகா பொறுப்பேற்றேன். இயக்கப் பிரசுரங்களை ஜனசக்தியை தோழர்களிடமும் வெகுமக்களிடமும் வினியோகம் செய்து கொண்டிருந்தேன். இப்போது போல் அப்போது தகவல் தொடர்பு கிடையாது தேசிய மாநில மாவட்ட தலைமைகளால் கைப்பட எழுதப்பட்ட செய்திகளை உறுப்பினர்களுக்குச் சொல்லி இயக்கங்களுக்கு அழைத்துச் செல்வேன்.

பரமக்குடி கட்சி அலுவலகத்தில் ஏதாவது ஒரு கூட்டம் கலந்துரையாடல் நடந்து கொண்டே இருக்கும். இளைஞர் கூட்டமும் எப்போதும் நிரம்பியிருப்பார்கள். இந்தக் காலகட்டத்தில் இளைஞர்களுக்குத் தற்காப்புக் கலை கற்றுக் கொடுப்பது என முயற்சி எடுத்து பரமக்குடியில் அந்தத் தற்காப்புக் கலை கற்றுக் கொடுக்கப்பட்டது. நம் கிளையில் ஜி.எஸ்.சுப்புராமன் வி.என். ஜெயராமன் ஆகியோரை அனுப்பி வைத்தோம்.

துடிப்புமிக்க இளைஞர்களாக இருந்த அவர்களின் முயற்சியில் ஊரின் நுழைவு வாயில் நிரந்தரமாக செங்கொடி பறக்க வேண்டும் என்ற முயற்சியில் முதலில் வலுவான சவுக்கு மரத்தில் செங்கொடி ஏற்றப்பட்டது. பின்நாளில் அது இரும்புக் கம்பமாக மாற்றம் பெற்று செங்கொடி பறக்கத் தொடங்கியது. இன்றைக்கும் ஊர்நுழைவு வாயில் செங்கொடி பறந்து கொண்டிருக்கிறது.

தோழர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு படிப்பகங்களை உருவாக்கும் முயற்சியாக 1960 ஆம் ஆண்டில் பி.ராமமூர்த்தி பரமக்குடியில் பொதுக்கூட்டத்திற்கு வந்திருந்தார். அவரை அழைத்து ஜீவா படிப்பகம் திறப்பு விழா நிகழ்ச்சி நடத்தி சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தோம்.

நம் தோழர்களிடம் இருக்கும் நூல்கள் சேகரிக்கப்பட்டு, அவ்வப்போது வருகின்ற புதிய நூல்களையும் வாங்கிச் சேமித்து வைத்திருந்தோம். குறிப்பிட்ட நாட்கள் வீட்டிற்குக் கொண்டு சென்று படித்து விட்டுப் படிப்பகத்தில் ஒப்படைக்கும் பழக்கத்தையும் வைத்திருந்தோம்.

**◆ கட்சி வாழ்க்கையில் நீங்கள் அனுபவித்து வியந்த நிகழ்ச்சிகள் ஏதாவது உண்டா?**

தோழர் ப. மாணிக்கத்தை ஒரு முறை கட்சி நிகழ்ச்சிக்காக அழைத்திருந்தோம். ப.மாணிக்கம் மிக எளிமையானவர் என்று கேள்விப்பட்டிருந்தோம். ஆனால் அதை அன்று நாம் கண்கூடாகப் பார்த்தோம். நிகழ்ச்சி நாளன்று இரயிலில் தோழர் ப.மாணிக்கம் வருகிறார் என மட்டும் அறிந்தோம். தோழர்கள் திரளாக பரமக்குடி ரயில்வே நிலையத்தில் கூடியிருந்தோம். ரயிலும் வந்தது.இரயிலில் உள்ளவர்கள் அனைவரும்இறங்கிவிட்டார்கள்.மாணிக்கம் யார் என்று எங்களுக்குத் தெரியவில்லை. கடைசிப் பெட்டியில் இருந்து தனி ஒருவராக இறங்கி வந்து கொண்டிருந்தார். இவர்தான் மாணிக்கம் என்பதை யூகித்துக் கொண்டு ‘‘தோழர் நீங்கள் ப.மாணிக்கம் தானே’’ எனக் கேட்டபோது ஆமாம் என்று சொன்னார். அவரின் எளிமையான நடைமுறை நம்முடைய தோழர்கள் பலமுறை பேசி வியந்திருக்கிறோம். அந்தக் காலத்திலேயே கனிம வளங்களைப் பற்றி அவர் பேசுவார். எளிமையும் பேச்சாற்றலின் ஆழமும் நம்மை வியக்க வைத்தது.

**◆ கட்சி வாழ்க்கையில் தங்கள் விருப்பம் என்று ஏதாவது உண்டா தோழர்?**

மக்கள் பிரச்சினைகளைக் கையாண்டு அதற்கான தீர்வுகளை மக்களுக்குப் பெற்றுத் தருவதால்தான் இன்று நூறாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது என்பது பெருமையாக இருந்தாலும் சீன ஆக்கிரமிப்பின் போது தத்துவார்ந்த ரீதியில் முரண்பட்ட கருத்துகள் ஏற்பட்டு தேவையற்ற விவாதங்கள் தொடங்கி 1964 கட்சி பிளவுபட்டது.இதனால் நாட்டிற்கும் கட்சிக்கும் மக்களுக்கும் எந்தப் பயனுமின்றி பாராளுமன்றஜனநாயகத்தில்பின்னடைவைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.இது என் போன்றோருக்கு மன வருத்தத்தையும் ஆறாத வடுவையும் ஏற்படுத்தியிருக்கிறது. சமீபகாலமாக இடதுசாரி ஒற்றுமை எனப் பயணித்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் பயணத்தை வலுப்படுத்தி இளைஞர் மன்றம், மாணவர் மன்றம் போன்ற வெகுஜன அமைப்பைப் பலப்படுத்தி முன்னேற வேண்டும் என்பதை அனுபவரீதியாக காலம் நமக்கு உணர்த்துகிறது. இதுவே எனது விருப்பம்.

நேர்காணல்: த.மு.சிவகுமார்

# சீமானின் நாசகர பிம்பக் கட்டமைப்புகள்

**பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை, கியூப விடுதலை இயக்கத்தைப் பரிந்துகொள்வது போலத்தான் ஒரு தமிழகத்தவர் ஈழப்பிரச்சினையையும் புரிந்துகொள்ள முயல வேண்டும். ஏகாதிபத்திய, பிராந்திய சக்திகளை ஒதுக்கிவிட்டு விடுதலைப் போராட்டங்கள் தொடர்பாக இன்று ஒருவர் நிலைபாடு எடுக்க முடியாது.**




தமிழகத்தில் விடுதலைப் புலிகள் மீதான வெறுப்பை விதைத்தவர்கள் இந்தியாவுக்கும் தமிழகத்துக்கும் உரிய பிரச்சினைகளை புலிகளின் மீது ஏற்றி அவர்களை சாதியவாதிகள், முஸ்லீம் வெறுப்பாளர்கள், சிங்களவர் மீதான இனவெறுப்பாளர்கள், பாசிஸ்ட்டுகள் எனும் சித்திரத்தை முன்வைத்தார்கள்.

புலிகள் சாதியவாதிகள் என்பதை அவர்களால் நிரூபிக்க முடியாது. இயக்கத்திலும் இயக்கத்திற்கு வெளியிலும் தமது கட்டுப்பாட்டுக்கு உள்ளிட்ட வெளிகளிலும் அவர்கள் சாதி எதிர்ப்பைக் கடைப்பிடித்தார்கள்.

யாழ் முஸ்லீம் வெளியேற்றத்தை அவர்கள் ராணுவ நடவடிக்கையின் பகுதியாகவே மேற்கொண்டார்கள். அதுவும் தமது அரசியல் தவறு எனப் பகிரங்கமாகப் பின்னர் அறிவித்தார்கள். ஒரு முஸ்லீம் வெறுப்பாளர், இனச்சுத்திகரிப்பாளர் அப்படிச் செய்ய முடியாது. இஸ்ரேலிய பிஜேபி கொள்கைச் செயல்பாடுகளை ஒப்பிட்டுக் கொள்ளுங்கள்.

**பாசிசம் இனவெறிப் பண்பு.**

புலிகளின் அமைப்பில் முஸ்லீம் போராளிகள் இருந்தனர். கிறித்தவர்கள் இருந்தார்கள். பிரசன்ன விதானகே போன்ற சிங்களத் திரைக்கலைஞர்கள் புலிகளுக்கு திரைப் பயிற்சியளித்தனர். புலிகள் அமைப்பில் சிங்களப் பெண்களை மணந்தவர்கள் உண்டு. புலிகளின்பால் ஆதரவான பார்வை கொண்ட சிங்கள அறிவுஜீவிகளும் உண்டு.

புலிகளின் தேசியம் அனைத்துப் பிரிவையும் உள்ளடக்கிய (Inclusive) தேசியமாகத்தான் இருந்தது. சீமானது போல அது பிற இனவெறுப்பு உயிர்க்கூற்றுத் தேசியம் (genetically defined racist nationalism) அல்ல.

ஈழப் போராளிகளினிடையில் மிகுந்த வலிதரத்தக்க இயக்க முரண்கள் என்பது உலகின் அனைத்து விடுதலை இயக்கங்களினதும் பகுதியாகத்தான் இருந்தன. இதில் ஆதிக்கம் செலுத்தக் கூடிய ஏகாதிபத்திய, பிராந்திய சக்திகள் அங்கம் வகித்தன. குர்திஸ், பாலஸ்தீன, காங்கோ, நிகரகுவா விடுதலை இயக்கங்களின் வரலாறுகள் இதனைச் சொல்லும். இந்த இடரைக் கடந்த ஒரே விடுதலை இயக்கம் பிடல், சே குவேரா தலைமையிலான கியூபாவினுடையது.

இதிலும் இயக்கங்களின் ஒற்றுமை பற்றி பிடல் வலியுறுத்த, சே குவேரா அதனை மறுதளித்தார்.

புலிகள் அமைப்பு பெண் போராளி அமைப்பை உருவாக்கி, அவர்களிலிருந்து தலைமைப் பொறுப்புக்கும் அவர்கள் வரும் நிலையை உருவாக்கியது. பெண்கள் மீதான குற்றங்களுக்கு மரணதண்டனை உள்ளிட்ட கடும் தண்டனைகளை அது வழங்கியது.

**புலிகள் அரசியல் தவறு செய்தார்களா?**

தமிழகத்தில் அவர்கள் நிகழ்த்திய அரசியல் படுகொலைகள் அவர்களது ஆதரவாளர்களை அவர்களிடமிருந்து அந்நியப்படுத்தியது. இந்திய அரசின் பகுதி தமிழக அரசு என்பதை அவர்கள் உணரத் தவறினர்.

கலைஞர் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை அவலத்தின்போது எதையாவது செய்யத் தவறினார் எனும் கோபம் இருக்கலாம். இது ஈழப் பிரச்சினையில் ஒரு பக்கம்தான். பிறிதொரு பக்கத்தில் தனது ஆட்சியதிகாரத்தை இழந்தும் இந்திய அரசை எதிர்த்தும் அவர் நிலைபாடுகள் எடுத்தார். அதில் ஏன் மாற்றம் வந்தது? என்பதில் தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் செயல்பாடுகளின் விளைவுகள் எனும் காரணமும் இருக்கிறது.

ஒரு மாநிலத்தின் முதல்வராக அவை கலைஞருக்கு மிகப்பெரும் நெருக்கடிகளைக் கொண்டு வந்தது. இவ்வாறான சமநிலை ஆய்வுகள் இல்லாமல் தமிழகம் ஈழம் குறித்த அரசியலைப் புரிந்துகொள்ள முடியாது.

பின் சோவியத் (ஆயுத விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவின்மை), பின் செப்டம்பர் (பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் அமெரிக்கா, மேற்கு நாடுகள், ரஸ்யா, கியூபா, சீனா என அனைத்தும் இதில் ஒன்றாக நின்றன) நிலைமைகளை அறிந்து தமது அரசியல் நிலைபாடுகளை அவர்கள் மாற்றிக் கொள்ளவில்லை.

ராணுவ நோக்கம் என்பதற்குக் கொடுத்த முக்கியத்துவத்தை அவர்கள் அரசியல் நோக்கம் என்பதற்குத் தரவில்லை.

தமிழகத்தின் திமுக, சிபிஐ உள்ளிட்ட பிற கட்சிகள் ஏதேனும் ஒரு ஈழ விடுதலை இயக்கத்தை ஆதரித்தன.

ஈழப் போராட்டத்தின் ரணமும் வடுக்களும் இன்னும் ஆறவில்லை. கடந்தால இயக்க முரண்கள் இன்றும் தொடர்கின்றன. அவர்களால் பல விஷயங்களை வெளிப்படையாகப் பேச முடியாது. இந்திய, இலங்கை அரசின் கண்காணிப்பில் அவர்கள் இருக்கிறார்கள். இந்த இடைவெளியில் சீமானது பிம்பக் கட்டமைப்புகள் நாசகாரத் தன்மைகொண்டது.

ஒருபுறம் சாவர்க்கர் வழிபாடு (இந்துத்துவவாதிகளான அண்ணாமலை, எச்.ராஜா, ரங்கராஜ் பாண்டே, தமிழிசை, குருமூர்த்தி ஆதரவு), இன்னொரு புறம் பிற இன வெறுப்பு, பிறிதொரு புறம் முஸ்லீம், கிறித்தவர் பாலான வெறுப்பு, சாதிகளை அபத்தமாகக் குடிகள் என வரையறுப்பது, ஆரிய மேலாண்மைக்கு எதிராக எழுந்த திராவிடத்தின் மீதான வெறுப்பு என சீமானது இந்தியப் பெருந்தேசிய, இந்துத்துவ அரசியல் எவ்வாறு தமிழின விடுதலை பேசும் தமிழகத் தமிழ் தேசியமாக ஆகமுடியும்?

**– யமுனா ராஜேந்திரன்**

---

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

எச்சங்களுக்கு அப்பாலும் உள்ள பண்பாட்டுப் பன்முகத் தன்மைகளைப் புரிந்துகொண்டுதான் பண்டைய பண்பாடுகளை மதிப்பிடவேண்டும்.

நெல் போன்ற வள உற்பத்தியின் வளர்ச்சியும் அதற்கு ஏற்றவாறான உற்பத்திக் கருவிகளும் உற்பத்திக் கட்டமைப்புகளும் உருவாகி முன்னேற்றம் கண்டிருந்த நிலையினை, இரும்பின் முழுமையான பயன்பாடு உறுதிப்படுத்துகிறது.

இயற்கைப் பிரிவுகளாகத் தமிழ்நாட்டில் நால்வகை நிலங்கள் அறியப்பட்டிருந்தாலும், குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகியன மட்டுமே இயற்கையில் அமைந்தவையாகும். மனித உழைப்பினாலும் உற்பத்தி நுட்ப வளர்ச்சியாலும் நீரியல் கட்டமைப்புகளாலும் மட்டுமே மருதம் என்ற நிலப் பகுப்பு உருவாக்கப்பட்டது என்பதை மறந்துவிடக்கூடாது. குறிஞ்சி, முல்லை, நெய்தல் சார்ந்த நிலங்களின் பகுதிகளிலேயே மருத மென்புலங்கள் பண்படுத்தப்பட்டு வளர்ச்சி பெற்றன.

பண்டைய பாடல்கள் குறிஞ்சி, முல்லை, நெய்தல் சார்ந்த நிலப் பகுதிகளின் வாழ்நிலைகளை விரிவாகவும் விளக்கமாகவும் நுட்பமாகவும் பதிவு செய்திருக்கின்றன. அந்தந்த நிலங்களின் சமூகபொருளியபண்பாட்டு வாழ்முறைப் போக்குகளை ஆழமாக வெளிப்படுத்தியிருக்கின்றன.

எனவே, மருத நில வாழ்நிலையில்தான் தமிழர் பண்பாடு தொடங்குகிறது என்று வரையறுப்பது முற்றிலும் பொருந்தாததாகும். அந்த நிலையினை எட்டக்கூடிய முந்தைய பின்புலத்தையும் காணவேண்டும்.

மேலும், நகர வளர்ச்சி மட்டுமே பண்டைய பண்பாட்டுச் செம்மைக்கு அடிப்படையாக இருந்துவிட முடியாது. இதனால், கட்டிடக் கட்டமைப்புகளைப் பண்பாட்டுத் தொன்மைக்கு எடுத்துக்காட்டாகக் கொள்வது தவறான முடிவுகளுக்கு இட்டுச் சென்றுவிடும்.

தமிழ்நாட்டில் கட்டிடக் கட்டமைப்புகள் இன்னும் அகழ்ந்தெடுக்கப்படவில்லை என்பதையும் இப்போதுதான் அகழ்வு முயற்சிகளின் பயன்கள் தெரியத் தொடங்கியிருக்கின்றன என்பதையும் புறக்கணித்துவிடக்கூடாது.

தமிழ்நாட்டின் தனித்தன்மைகளையும் இங்கு கணக்கில் கொள்ளவேண்டும்.

சீனாவைத் தவிர்த்து, பிற பண்டைய பண்பாடுகள் அனைத்தும் ஏதோவொரு வகையில் அழிவைக் கண்டுவிட்டன. அந்தப் பண்பாடுகளின் தொடர்ச்சி அறுந்ததுடன், அவை ஏன் அழிவுற்றன, அந்தப் பண்பாடுகளை வளர்த்தெடுத்தோர் நிலை என்னவாயிற்று என்பன போன்ற விவரங்கள் எதுவும் அறியக் கிடைக்கவில்லை. அத்தகைய பண்டைய பண்பாடுகளின் இருப்பிடங்களில் வேறு யாரும் குடியேறி, அடுத்தடுத்து வாழ்ந்ததாகவும் தெரியவில்லை. இதனால், பண்டைய பண்பாடுகளின் கட்டிடக் கட்டமைப்புகள் மண்ணில் புதைந்தோ, தனித்திருந்தோ இன்று எச்சங்களாக வெளிப்பட்டிருக்கின்றன.

ஒரு வகையில் பார்த்தால், பண்டைய பண்பாடுகளில், மக்கள் வாழ்நிலை பற்றிய விவரங்கள் இலக்கியங்கள் வழியாகவோ, வேறு பதிவுகள் வழியாகவோ தெரியவில்லை. ஆனால், பண்டைய இலக்கியங்கள் தமிழரது வாழ்முறைகளை முழுமையாகப் படம்பிடித்துக் காட்டியிருக்கின்றன.

பண்டைத் தமிழரைப் பொறுத்தவரை, அவர்களின் வாழிடங்களில் அவர்களது தலைமுறையினர் இன்றுவரை தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். வழிபாட்டுக் கட்டமைப்புகள் தோன்றியிராத காலத்தைச் சார்ந்த நிலை அன்று இருந்ததால், பிற வாழிடங்கள் யாவும் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு வந்தன. இது இயற்கையின் விளைவாகும். இதனால், பழைய கட்டமைப்புகள் எஞ்சியிருக்க வாய்ப்புகள் இல்லாமல் போயிற்று.

மேலும், பண்டைத் தமிழ் இலக்கியங்களில் நகரங்கள், மாடமாளிகைகள் போன்றவை கூறப்பட்டாலும், இனக்குழு வாழ்முறையின் எச்சங்கள் ஏதோவொரு முறையில் தொடர்ந்துகொண்டிருந்தன. மிகை உற்பத்தியும் பொருள் திரட்சியும் ஏற்பட அப்போது வாய்ப்புகள் இருக்கவில்லை. இதனால், பெருமளவில் நகரங்களின் தோற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

வேளாண் வளர்ச்சியின் விரிவாக்கம் மட்டுமே பெரிதென ஏற்கப்பட்டு, விளைநிலப் பகுதிகள் விரிவடைந்தன. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவு பெருகியிருந்த நிலையினை சிவகளை போன்ற அகழ்வுகள் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன.

சிந்துவெளி, அரப்பா போன்ற பண்பாடுகளில் இருந்ததைப் போன்ற வளர்ச்சி பெற்ற வழிபாட்டு அடையாளங்கள் எதுவும் தமிழ்நாட்டின் அகழ்வுகளில் இதுவரை கிடைக்கவில்லை என்று கூற முடியும். இதுவும் சிந்துவெளி, அரப்பாப் பண்பாடுகளுக்கு முந்தியதாகத் தமிழர் பண்பாடு இருந்தது என்பதைக் காட்டிவிடுகிறது. காலக் கணக்கீடும் இதனை உறுதிப்படுத்திவிடுகிறது.

இரும்பின் தொன்மை குறித்த இத்தகைய கண்டுபிடிப்புகள் தொடக்கம் மட்டுமே. இன்னும் அகழ்ந்தெடுக்காமல் இருக்கின்ற பல இடங்களையும் ஆய்வு செய்யும்போது, மேலும் பல விவரங்கள் கிடைக்கலாம். கீழடிக் கட்டமைப்புகளை எப்படி யாரும் எதிர்பார்க்கவில்லையோ, அது போல மேலும் பல தரவுகள் புதிதாகக் கிடைக்கலாம்.

ஆனால், கிடைத்திருக்கின்ற பொருள்களையும் இரும்பின் காலக்கணக்கையும் எடுத்துப் பார்க்கும்போது, சிந்துவெளி, அரப்பா ஆகிய பண்டைய பண்பாடுகளுக்கு அப்பால், உலகின் நிலவிய பிற பண்பாடுகளுக்கெல்லாம் எவ்வகையிலும் பின்தங்கியதாகத் தமிழர் பண்பாடு இருக்கவில்லை என்ற முடிவுக்கு வருவதில் தயக்கமோ, தடையோ, அய்யமோ இருப்பதாகத் தெரியவில்லை.


தொடர்புக்கு : 9444075561

ஜனசக்தி

# அனைத்திந்திய இளைஞர் பெரு

# தமிழ்நாடு மாநில 18வது மாநாட்

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் (AIYF) தமிழ்நாடு மாநில 18வது மாநாடு தருமபுரியில் நடைபெற்றுள்ளது. வேலை பெறும் உரிமையை அடிப்படை உரிமையாக்கு என்பது உள்ளிட்ட 27 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.






## வேலை பெறும் உரிமையை அடிப்படை உரிமையாக்கு!

இந்திய குடிமக்கள் அனைவரும் கண்ணியமான வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ப அரசின் கொள்கைகள், திட்டங்கள் இருக்க வேண்டும் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. கண்ணியமான வாழ்க்கை வாழ்வதற்கு உணவு, உடை, இருப்பிடம் உள்ளிட்டவை அடிப்படையானதாகும். இவற்றைப் குடிமக்கள் பெற வேண்டுமென்றால், சமமான கல்வியும், வேலையும் இன்றியமையாததாகும். ஆனால், விடுதலைக்குப் பிறகு, இந்திய வரலாற்றில் இல்லாத அளவிற்கு தற்போது வேலையின்மை பன்மடங்கு பெருகியுள்ளது. நிதி மூலதனத்திற்கு ஆதரவாகவும், இந்திய இளைஞர்களின் நலனுக்கு எதிராகவும் அரசின் கொள்கைகள் இருப்பதே இதற்கு முக்கிய காரணமாகும்.

வேலை உரிமை என்பது அடிப்படை உரிமையாக இல்லாமல், அரசியலமைப்புச் சட்டம் பகுதி மிக்ஷின் கீழான சாதாரண உரிமையாக உள்ளது. அடிப்படை உரிமையாக மாற்றப்பட்டால் மட்டுமே இந்திய இளைஞர்கள் அனைவருக்கும் வேலை கிடைப்பதை உறுதி செய்ய முடியும். வேலை கிடைக்காத நிலையில், நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்து வேலை பெற முடியும்.

எனவே, வேலை பெறும் உரிமையை அரசியலமைப்புச் சட்டம் சரத்து 19ன் கீழான அடிப்படை உரிமையாக கொண்டு வர நாடாளுமன்றத்தில் சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும்.

## வேலையில்லா கால நிவாரணமாக ரூ.7000 வழங்கிடுக!

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் ஒரு கோடி இளைஞர்கள் வேலை தேடுவோர் பட்டியலில் சேர்கின்றனர். இதில், சுமார் 83% பேர் இளைஞர்கள். இவர்கள் உழைப்பை செலுத்துவதற்கு தயாராக இருந்தாலும் பெருமளவில் வேலை கிடைக்கப் பெறாமல் இருக்கிறார்கள்.

வேலை என்பது அரசின் பொறுப்பு, வேலையின்மைக்கு காரணம் அரசின் கொள்கைகள்தான் காரணம் தமிழ்நாட்டில், இந்திய அளவில் பெயரளவில் மட்டுமே வேலை இல்லா கால நிவாரணங்கள் சொற்ப நபர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்துக்கொண்டிருக்கும் இளைஞர்கள் அனைவருக்கும் வேலையில்லா கால நிவாரணமாக மாதந்தோறும் ரூ.7000த்தை ஒன்றிய, மாநில அரசுகள் வழங்க வேண்டும்.

## கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றிடுக!

மாநிலங்கள் இணைந்த ஒன்றியமாக அமைந்துள்ள இந்தியநாட்டின் கட்டமைப்பில் இன, மொழி, கலை, கலாச்சார, பண்பு, பழக்கவழக்கங்கள் போன்றவைகளில் வேறுபட்ட, தனித்துவம் வாய்ந்த தன்மைகள் நிலவுகின்றன. இதன் தொன்மை வரலாற்றையும், வழிவழியான நல்லியல்பு மரபுகளையும் பேணும் கல்வி முறையும் மாநிலத்திற்கு, மாநிலம் வேறுபடுகிறது. ஆனால், ஒன்றியத்தில் பாஜக ஆட்சிப் பொறுப்பெடுத்ததற்குப் பின்னால், இந்தியாவின் பன்முகத்தன்மைக்கும், கூட்டாட்சி முறைக்கு எதிராகவும், தாராளமய கொள்கைகளுக்கு ஆதரவாகவும் ஒரு கல்விக் கொள்கையை உருவாக்கி, அதை நடைமுறைப்படுத்தி வருகிறது. கல்வியில் மாநிலங்களின் உரிமைகளை முற்றிலுமாக பறித்து வருகிறது.

ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்தியுள்ள "நீட்" தேர்வை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் ஒன்றுபட்டு தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறோம். அனைத்துப் பட்டப் படிப்புகளில் சேர்வதற்கும் நாடு முழுவதும் ஒரே நுழைவுத் தேர்வு முறையை நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இது போன்ற ஒற்றை அதிகாரக் கொள்கைகள் இந்திய விடுதலைக் குறிக்கோள்கள், இந்திய அரசியலமைப்பின் குறிக்கோள்கள், கூட்டாட்சி முறை ஆகியவற்றிற்கு எதிரானது. கல்வியில் மாநில அரசுகளின் உரிமைப் பறிப்பு என்பது கல்வியில் அந்நியச் சுரண்டலுக்கு வழி வகுக்கும். இந்திய நாட்டை கல்விச் சந்தைக்கான காலனியாக்குவதை அனுமதிக்க முடியாது. எனவே, மொழி வழி மாநில அரசுகளின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற அரசியலமைப்பில் சட்ட திருத்தம் மேற்கொள்ள வேண்டும்

## அரசு காலிப் பணியிடங்களை உடனே நிரப்பிடுக!

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்திருப்போரின் எண்ணிக்கை தமிழ்நாடளவில் 67.8 லட்சமாகவும், இந்திய அளவில் 4.57 கோடியாகவும் உள்ளது. மேலும், வேலை கேட்டு பதிவு செய்யாதவர்களும் பல கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். மறுபுறம், ஒன்றிய, மாநில அரசுத் துறைகளில் பல லட்சம் பணியிடங்கள் காலியாக உள்ளன. வேலையில்லா திண்டாட்டம் பல்மடங்கு அதிகரித்து வரும் நிலையில், ஒன்றிய, மாநில அரசு காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்.

## தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசுப் பணிகளில் தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்கிடுக!

2014ல்பாஜக ஆட்சிப்பொறுப்பேற்றதற்குப் பின்னால் தமிழ்நாட்டிலுள்ள ஒன்றிய அரசின் காலிப் பணியிடங்களில் வட மாநிலத்தவர்களை பெருமளவில் பணியமர்த்தி வருகிறது. தகுதி இருந்தும் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள்.

எனவே, தமிழ்நாட்டிலுள்ள உள்ள ஒன்றிய அரசின் காலிப் பணியிடங்களுக்கு தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்க சட்டமியற்ற வேண்டும்.

## கிக் தொழில்களுக்கு அரசே செயலிகளை துவங்க வேண்டும்!

இந்தியாவில் உணவு மற்றும் பொருள் வினியோகம், டாக்ஸி போன்ற கிக் தொழில்கள் வேகமாக வளர்ந்து வருகிறது. தமிழ்நாட்டில் சுமார் 8 லட்சம் பேர் இந்திய அளவில் 1 கோடிக்கும் அதிகமான தொழிலாளர்கள் இப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். உபெர், ஓலா, ஸ்விக்கி, ஜொமாட்டோ போன்ற நிறுவனங்கள் தங்களது இணையவழியிலான தளங்கள் மற்றும் செயலிகள் மூலம் கிக் தொழில்களை நடத்தி வருகின்றன.

கிக் தொழிலாளர்களை இந்நிறுவனங்கள், தொழிலாளர்களாக அல்லாமல் பங்குதாரர்களாக வகைப்படுத்துகின்றனர். இதனால், இவர்கள் தொழிலாளர் நலச் சட்டங்களின்படி எந்த உரிமையும் பெற முடியாதவர்களாகின்றனர். பணிப்பாதுகாப்பு, சமூகப்பாதுகாப்பு மற்றும் ஓய்வூதியம் ஆகியவை இல்லை. மேலும், பதவி உயர்வு, ஊதிய உயர்வும் இல்லை. எப்போது வேண்டுமானாலும் வேலைக்கான ஐடி முடக்கப்படும் அபாயத்திலேயே பணியாற்றி வருகின்றனர். அரசே இத்தொழில்களுக்கான செயலிகளை உருவாக்கினால், இத்தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கப்படும்; அரசிற்கும் வருமானம் கிடைக்கும்.

## அசல் சான்றிதழ்களை வாங்கி வைத்துக்கொள்ளும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை!

"தனியார் கல்வி நிறுவனங்களில், ஒரு மாணவரை சேர்க்கும்போதோ, வேலைக்கு ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்போதே, அவரது சான்றிதழ்களின் உண்மைத்தன்மையை ஆராய்ந்தபின் அதை உரியவரிடம் ஒப்படைக்க வேண்டும். இந்நிறுவனங்கள் சான்றிதழ்களை வாங்கி வைத்துக்கொள்வது அவரது முக்கிய ஆவனத்தைப் பிடுங்கி வைத்துக் கொள்வதற்குச் சமம். சான்றிதழ்களை வாங்கி வைத்துக்கொள்ளும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று ஒன்றிய, மாநில அரசுகளும், நீதிமன்றங்களும், யு.ஜி.சி.யும், பல்கலைக்கழகங்களும் பலமுறை தெரிவித்துள்ளன.

சான்றிதழ்களை வாங்கி வைத்துக்கொள்வது நீடிக்கிறது. சான்றிதழ்களைத் திருப்பிக் கேட்கும்போது அவை மறுக்கப்படுகின்றன. இதனால் பல பேர் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர்; தற்கொலையும் செய்துகொள்கின்றனர்.

எனவே, அசல் சான்றிதழ்களை வாங்கி வைத்துக் கொள்ளும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## தேசியக் கல்விக் கொள்கையை முழுமையாக திரும்பப் பெறுக!

ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் தேசியக் கல்விக் கொள்கை 2020 பொதுக்கல்வி கட்டமைப்பை முழுமையாக சிதைக்கிறது. பாடத்திட்டம் உருவாக்குவது, நிர்வாகம் உள்ளிட்ட அனைத்தையும் ஒன்றிய அரசின் அதிகாரத்தின் கீழ் எடுத்துக் கொள்கிறது. மும்மொழி கொள்கையின் மூலம் இந்தி திணிப்பு, திறன் மேம்பாடு என்கிற பெயரில் குலக் கல்வியை திணிக்கிறது.

கல்வியை வணிகமாக பாவித்து பன்னாட்டு நிறுவனங்களுக்கு இந்தியக் கல்விச் சந்தையை திறந்துவிடுகிறது. சமூகத்தில் அனைத்து பிரிவினருக்கும் கல்வி கிடைக்கும் பொருட்டு பரவலாக்கலுக்கு பதிலாக மூடு திரையிடுகிறது. இட ஒதுக்கீடு, சமூக நீதியை புறந்தள்ளுகிறது. அறிவியலுக்கு புறம்பான



# மன்றத்தின்
# டுத் தீர்மானங்கள்





பிற்போக்கு கருத்துகளையும், பன்மை நிறைந்த இந்தியப் பண்பாட்டையும், உண்மை வரலாற்றையும் பாடத்திட்டங்களில் மாற்றி வருகிறது.

மேடுபள்ளமாக, ஏற்றத்தாழ்வுகள் நிரம்பி வழியும் சமூகத்தில் சமத்துவத்தை, சகோதரத்துவத்தை, மனித மாண்புகளை வளர்த்தெடுக்கும் பண்பாட்டுக் கூறான கல்வியை தனது சனாதனக் கொள்கையை நிறுவுவதற்கான கருவியாக பா.ஜ.க தலைமை யிலான ஒன்றிய அரசு பயன்படுத்திக் கொண்டுள்ளது.

காவிமயம், வணிகமயம், ஒற்றைமயமாக்கும் தேசிய கல்விக் கொள்கையை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும், அக்கொள்கையை மாநில அரசு உறுதியாக எதிர்க்க வேண்டும்.

### நீட் விலக்கு மசோதாவிற்கு உடனே ஒப்புதல் வழங்கிடுக!

மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு பாஜக அரசால் கொண்டு வரப்பட்ட நீட் தேர்வானது பணம் படைத்தவர்களும், உயர்சாதியினர் மட்டுமே மருத்துவம் பயில முடியும் என்ற நிலையை உருவாக்கிவிட்டது. கல்வியில் மாநிலங்களின் உரிமையைப் பறிக்கிறது; இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கிய கூறுகளான கூட்டாட்சி முறையையும், சமூக நீதியையும் மறுதலிக்கிறது.

நீட் பயிற்சி மையங்கள் பல்லாயிரம் கோடி ரூபாய் பணம் புழங்கும் தொழில் நிறுவனங்களாக மாறிவிட்டது. இந்திய மக்களுக்காக, இந்திய வளர்ச்சிக்காக என்ற சிந்தனையை மாற்றி, அன்னிய நாட்டவர் விரும்புவதுபோல், இப்பயிற்சி மையங்கள் நமது மாணவர்களை வளர்த்தெடுக்கிறார்கள்.

நீட் விலக்கு மசோதா தமிழ்நாடு சட்டமன்றத்தில் இரண்டுமுறை கொண்டு வரப்பட்டும், ஒன்றிய அரசும், தமிழ்நாடு ஆளுநரும் ஒப்புதல் வழங்க மறுக்கின்றனர். எனவே, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கையான நீட் விலக்கு மசோதாவிற்கு உடனே ஒன்றிய அரசு விலக்களிக்க வேண்டும்.

### ஆணவக் கொலைகளைத் தடுக்க தனிச்சட்டம் இயற்றிடுக!

சட்டப்படி திருமணம் செய்து கொள்ளும் வயது வந்த ஆணும் பெண்ணும் தங்களின் இல்வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் சுதந்திரம் ஜனநாயக நாட்டில் அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும்.

சாதியம் என்ற செயற்கையான கட்டமைப்பில் சிக்கிய நமது சமூகம், பெண்களை சந்தைப் பொருளாக விற்கும் அவலத்திற்கு வித்திட்டுவிட்டது. அதிலிருந்து, நாகரீக சமுதாயம் மீண்டு காதல் மணங்களை அங்கீகரிக்க வேண்டி முற்போக்கு இயக்கங்கள் போராடி வருகின்றன. ஆனாலும், சுயசாதி பெருமை பேசும் இடைச் சாதியினர், மனமொத்து கூடி வாழ முடிவெடுக்கும் இளம் இணையர்களை ஒதுக்குவதோடு ஆணவப் படுகொலையும் செய்து வருகின்றனர்.

சட்டப் போராட்டத்தை காலம் தாழ்த்தி நடத்தி நீதி கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது. எனவே, ஆணவக் கொலைகளைத் தடுக்க தனிச்சட்டம் இயற்ற வேண்டும்; குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருவதில் காவல்துறை பாரபட்சமில்லாமல் முனைப்புடன் செயலாற்ற வேண்டும்.

### மாநிலங்களின் கல்வி உரிமையைப் பறிக்கும் யு.ஜி.சி வரைவு விதிகளைத் திரும்பப்பெறு!

பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் உதவிப் பேராசிரியர் நியமனங்கள் தொடர்பாக பல்கலைக்கழக மானியக்குழு புதிதாக அறிவித்திருக்கும் வரைவு விதிமுறைகள் மாநிலங்களின் கல்வி உரிமைகளைப் பறிப்பதாக உள்ளது. பல்கலைக்கழக துணை வேந்தர்கள் நியமன தேடுதல் குழுவில் பல்கலைக்கழக மானியக் குழுவின் பிரதிநிதி, ஆளுநரின் பிரதிநிதி, பல்கலைக் கழகங்களின் பிரதிநிதி ஆகியோர் இடம் பெற வேண்டும் என புதிய விதிமுறைகளை புகுத்திருப்பது, மாநில அரசின் உரிமைகளை பறித்து, அதனை முற்றிலுமாக விலக்கி வைப்பதுடன், பல்கலைக் கழககங்களின் "தன்னாட்சி" நிலையை தகர்த்து, ஒன்றிய அரசின் ஏதேச்சதிகார கொள்கைகளை திணிக்கும் பேரபாயம் கொண்டதாகும். மேலும், ஒன்றிய அரசே உதவிப் பேராசிரியர்களை நியமனம் செய்யவும் வழிவகை செய்துள்ளது.

மாநில பல்கலைக்கழகங்கள் அந்தந்த மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீட்டில் உருவாக்கப்பட்டவை. வரலாறு, மொழி, பண்பாடு, கலாச்சாரம், சமூக, பொருளாதார சூழல் உள்ளிட்டவை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றது. மாநில அரசால் மட்டுமே அந்த மாநிலத்தின் கல்வித் தேவைகளை உணர்ந்து செயலாற்ற முடியும். இது இந்தியாவை இருண்ட காலத்திற்கு இழுத்துச் செல்லும் தேசிய கல்விக் கொள்கையின் அங்கமாகும்.

எனவே, இவ்வரைவு விதிகளை, ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்.

மற்ற தீர்மானங்கள் அடுத்த இதழில்

## தோழர்களைப் போற்றுவோம்



டி.ராமசாமி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நூறு ஆண்டில் அடியெடுத்து வைத்து வீறு நடை போட்டுக் கொண்டிருக்கிறது. மாமேதை லெனின் கம்யூனிஸ்ட் கட்சியை இது ஒரு புதிய வகைப்பட்ட கட்சி என்று அறிவித்தார். ஆம் புதிய வகையிலான கட்சிதான். மற்ற எல்லா கட்சிகளிடமும் இருந்து வேறுப்பட்ட கட்சியாக 100 ஆண்டுகளுக்குப் பின்பும் தொடர்கிறது.

சமீபத்தில் கட்சி உறுப்பினர்கள் புதுப்பித்தல், சேர்த்தல் சம்பந்தமாக ஒரு கிளைக் கூட்டத்திற்குச் சென்றேன். அந்தக் கிளையில் மொத்தம் 45 பேர் கூட்டம் இரவு 7 மணி என்று அறிவிக்கப்பட்டது. படிப்படியாக இரவு 8 மணி வரை 25 தோழர்கள் வந்தார்கள். அனைவரும் கூலி வேலைக்குச் சென்றுவிட்டு, 6 மணிக்கு வீடு திரும்பி அதன் பின்பு உடலுழைப்பால் ஏற்பட்ட சோர்வில் இருந்து தங்களைப் புதுப்பித்துக் கொண்டு கூட்டத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

வெட்ட வெளியில் கூட்டம் தொடங்கியது. அரசியல் உரை என்று பேசத் தொடங்கினேன். என் மனதில் ஒரு பிரமிப்பு பெருமை ஏற்பட்டது. நாம் இவர்களுக்கு என்ன செய்கிறோம். எதை எதிர்பார்த்து வருகை தந்திருக்கிறார்கள். பதவிக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசையா? அது எட்டாக்கனி அதுவும் அனைவருக்கும் கிடைக்காது. பின் எதை எதிர்பார்க்கிறார்கள்? என்று என்னுள் வியந்தேன். இந்தக் கட்சியின் மீது உள்ள நம்பிக்கை, சாதாரண உழைக்கும் மக்களின் குரலாய்த் தன்னலமற்ற சேவையால் நியாயத்தைத் தட்டிக் கேட்கும் கம்யூனிஸ்ட் கட்சி என்ற நம்பிக்கையில் கூட்டத்தில் அமர்ந்திருக்கிறார்கள் என்பது விளங்கியது.

மற்ற கட்சிகளில் எப்போதாவது கூட்டம் நடக்கும். கூட்டத்தில் கலந்து கொள்வதற்குப் பணம் மற்ற வசதிகள் எல்லாம் செய்து கொடுத்து அழைத்து வருகிறார்கள்.

நம் தோழர்களோ, கூட்டத்திற்குப் போராட்டத்திற்கு ஆர்பாட்டத்திற்கு அழைக்கும் போதெல்லாம் வருகிறார்கள். மற்ற கட்சிகளில் பணம் கொடுக்கிறார்கள். நாம் கூட்டம் போட்டு கட்சி சந்தா கேட்கிறோம். கொடுக்கிறார்கள் பணம் கொடுத்து அரசியல் நடத்துபவர்களுக்கு மத்தியில் பணம் வாங்கி (சந்தா) நாம் கட்சி நடத்துகிறோம். என்ன நம்பிக்கை ஆட்சிக்கு வருவோம். காண்டிராக்ட் பெறுவோம் வாரிசுகளுக்கு அதிகாரத்தின் மூலம் வேலைவாய்ப்பு பெறுவோம். ஏழைகளாய் இருக்கும் நாம் உடனடியாகப் பணக்காராகி விடலாம் என்ற நம்பிக்கை கண்டிப்பாக இல்லை. இவர்கள்தான் கட்சியைத் தாங்கி நிற்பவர்கள். நவீன கால தியாகிகள்.

கட்சி 1925 டிசம்பர் 26 தொடங்கியதற்குக் காரணம் 1848 ல் காரல்மார்க்ஸ் ஏங்கலஸ் வெளியிட்ட கம்யூனிஸ்ட் அறிக்கை அதன் தாக்கத்தால் உலகில் ஏற்பட்ட மாற்றங்கள் 1917 ல் சோவியத் மண்ணில் மாமேதை லெனின் தலைமையில் புரட்சி வெற்றி பெற்று சோவியத் ஆட்சி அமைந்தது. இந்நிகழ்வுகள் இந்தியாவில் பல கம்யூனிஸ்ட் குழுக்களை உருவாக்கியது.

தமிழகத்தில் சிங்காரவேலர், வங்கத்தில் முசாபர் அகமது மகாராஷ்ராவில் ஷிகி டாங்கே, போன்ற தலைவர்களில் தலைமையில் இயங்கிய இன்னும் இதுபோன்ற பல குழுக்கள் ஒன்றினைந்து கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டது. மூன்று முறை கட்சி தடைசெய்யப்பட்டது. கட்சித் தலைவர்கள், தோழர்கள் பல முறைகள், சிறைக் கொடுமைகள் சித்திரவதைகளைத் தாங்கி தியாகம் செய்து கட்சியைப் பாதுகாத்து வந்தார்கள். பல பேர் தங்கள் சொந்த சொத்துகளை விற்று கட்சிக்காகச் செலவு செய்தார்கள்.

அந்தக் காலத்தில் நிகழ்ந்த மாற்றங்கள், உலகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், ரஷ்யாவில் ஏற்பட்ட சோசலிச ஆட்சி இரண்டாவது உலகப் போரில் ஹிட்லரின் பாசிசப் படையை, செஞ்சேனை முறியடித்தது. சோவியத் தலைமையில் சோவியத் ஆட்சியும் அதைத் தொடர்ந்து பல நாடுகளில் சோசியலிச ஆட்சி ஏற்பட்டது. சோசலிசத்தில் பஞ்சமில்லை, பட்டினியில்லை அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் வேலை, அனைவருக்கும் வீடு என்ற நிலை உருவாக்கப்பட்டது. உலகம் முழுவதும் சோசலிச ஆட்சி வேண்டும் என்றும் விரைவில் இந்தியா உட்பட உலகம் முழுவதும் சோசலிச ஆட்சி ஏற்படும் என்ற நம்பிக்கை கம்யூனிஸ்ட் கட்சிகளை உத்வேகத்துடன் செயல்பட வைத்தது. கட்சித் தலைவர்கள், ஊழியர்கள், தோழர்கள் அனைவரும் தன்னம்பிக்கையுடன் செயல்படுவதற்கும் உத்வேகம் ஊட்டியது.

ஏத்தகைய இழப்புகள் ஏற்பட்டாலும் இயக்கத்துக்காகத்தான் என்று செயல்பட்டார்கள். 1986 க்குப் பிறகு உலகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் சோசலிச நாடுகளின் வீழ்ச்சி இடது சாரிகளுக்கு ஏற்பட்ட பின்னடைவு முதலாலித்துவத்தின் வியூகம் உலகம் கார்ப்பரேட் மயமாக்கப்பட்டது போன்றவை இடதுசாரிகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது.

கார்ப்பரேட் மயம் அரசியலிலும் ஏற்பட்டது. கட்சி நடத்துவது, தேர்தல் நடத்துவது இவை பணமயமானது. ஊழல், லஞ்சம் அதிகரித்தால் அனைத்தும் பணமயமானது. இந்தியாவில் தேர்தல் ஜனநாயகத்தில் கம்யூனிஸ்ட் கட்சி முதன் முதலில் 1957ல் கேரளா மாநிலத்தில் ஆட்சியைக் கைப்பற்றியது. தொடர்ந்து ஒன்பது மாநிலங்களில் கூட்டணி ஆட்சியில் கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகித்தது. நாடாளுமன்றத்தில் இந்தியாவின் பல மாநிலங்களில் இருந்து வென்றோம். உலகமே வியக்கும் வகையில் பாராளுமன்றத்தில் 62 பேர். இடது சாரிகள் மேற்கு வங்கம், திரிபுரா நல்லாட்சி தொடர்ச்சியாக முப்பது ஆண்டுகளுக்கு மேல் நடத்தினோம். ஜோதிபாசு, தோழர் ணி.வி.ஷி சி.அச்சுத மேனன், வாசுதேவன்நாயர் நிருபன் சக்கரவர்த்தி போன்ற முதல்வர்கள் பொறுப்பில் இருந்தார்கள்.

வங்கத்தின் சிங்கங்கள் தோழர் பூபேஷ்குப்தா, தோழர் இந்திரஜித் குப்தா, தோழர் கீதா முகர்ஜி, தோழர் ரேணுகாசவுத்திரி பேராசிரியர் ஹிரேன் முகர்ஜி, குருதாஸ் குப்தா போன்றவர்கள் நாடளுமன்றத்தில் கர்ஜிக்கும் தலைவர்களாக இருந்தார்கள். ஒன்றியத்தில் கூட்டணி ஆட்சியிலும் பங்கெடுத்தோம். தற்போது அடையாளத்திற்குத் தமிழகத்தில் இருந்து இரண்டு எம்.பி.கள் இந்தியாவில் வேறெங்கும் இல்லை. இருந்தாலும் கட்சி இருக்கிறது, இயக்கம் இருக்கிறது, வெல்ல முடியாத மார்க்சீயக் கொள்கை இருக்கிறது என்ற நம்பிக்கையோடு முதலாளித்துவக் கட்சிகளின் நடவடிக்கைக்கு மத்தியில் எதையும் எதிர்பார்க்காமல் கட்சிக்குச் சந்தா செலுத்தி கட்சி முடிவெடுத்து அறிவிக்கும் போராட்டங்களில் வேலையை விட்டு பங்கெடுத்து தேர்தலில் யாருக்கு வேலை செய்யச் சொன்னாலும் கட்சி முடிவைச் சிரமேற்கொண்டு பணியாற்றிக் கட்சியின் அருமை, பெருமைகளைப் பாதுகாத்துச் செயல்பட்டு வரும் தோழர்களைப் போற்றுவோம். இதுதான் மாமேதை லெனின் உருவாக்கிய புதிய வகையிலான கட்சி போற்றுவோம். சாதி, மத பேதமற்ற சமத்துவ இந்தியாவைப் படைக்கும் வரை இப்பயணத்தில் தொடர்வோம்.

தொடர்புக்கு : 8248387433

# பெருகிவரும் வேலையின்மையால் ஆபத்து!
# சிறு குறு தொழில்களை முடக்கும் மோடி அரசு!



த.லெனின்

**சங்க இலக்கியங்களில் பல்வேறு தொழில்கள் குறித்து கூறப்பட்டுள்ளன. நூல் நூற்ற பெண்களைப் பருத்திப் பெண்டிர் என்று குறிப்பிடுகிறது.**

கொல்லன் உலைக்களத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்பினை அடிக்கும்பொழுது அதிலிருந்து தீப்பொறிகள் சிதறுகின்றன. இது அழகிய சிறிய காய்களைக் கொண்ட வேங்கை மரத்தின் மணம் நிறைந்த மலர்கள் உதிர்வதைப் போல இருக்கிறதாம்.

**இரும்புசெய் கொல்லன் வெவ்வுலைத் தெளித்த” (நற். 133; 9)**

**“............ ........ கொல்லன் உலையூதுந் தீயேபோல் உள்கனலும் கொல்லோ” (நாலடி. 298; 23)**

இப்படி சங்க காலத்திலேயே தொழில்கள் சிறப்பாக நடந்துள்ளன. தொழில் யுகமான இன்றைக்குச் சொல்ல வேண்டுமா?

### உற்பத்தித் துறையில் சிறு குறுந்தொழில்களின் பங்கு!

இந்திய உற்பத்தித் துறையில் சிறு குறு நடுத்தரத் தொழில்களின் (எம்.எஸ்.எம்.இ) பங்களிப்பு, 2022 ஆம் ஆண்டில் 35.4 விழுக்காடு. இதேபோன்று நாட்டின் ஏற்றுமதியில் சிறு குறு நடுத்தரத் தொழில்களின் பங்களிப்பு 2024 ஆம் ஆண்டு 45.7 விழுக்காடு என்று இந்தியாவின் பொருளாதார கணக்கெடுப்பு தெரிவித்துள்ளது.

ஒன்றிய அரசின் கடந்த பட்ஜெட்டில் முதலாவதாக, எம்எஸ்எம்இ துறையினர் எந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றை வாங்குவதற்கான கடனை எளிதாகப் பெற கடன் உத்தரவாதத் திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இதற்கென ஒரு உத்தரவாத நிதி உருவாக்கப்படும். அந்த நிதியின் மூலம் ரூ. 100 கோடி வரை கடன் உத்தரவாதம் வழங்கப்படும். கடனை வாங்கவிருப்பவர் இதற்கென உத்தரவாதக் கட்டணம் ஒன்றை செலுத்தினால் போதுமானது என்றெல்லாம் பெரும் ஆரவாரத்தோடு அறிவிக்கப்பட்டது.


எம்எஸ்எம்இ துறையினருக்குக் கடன் வழங்க, குறிப்பிட்ட அந்த நிறுவனத்தின் திறன் பற்றி அறிய வங்கிகள் வெளி அமைப்புகளைச் சார்ந்திருக்க வேண்டியிருப்பதால். பொதுத் துறை வங்கிகளே எம்எஸ்எம்இக்களை மதிப்பிடும் திறன்களை உடைய அளவில் உருவாக்கப்படும். எம்எஸ்எம்இ நிறுவனங்களின் சொத்து மதிப்பு, உற்பத்தி மதிப்பு ஆகியவற்றுக்குப் பதிலாக அந்த நிறுவனங்களின் டிஜிட்டல் தடங்களை வைத்து, நிறுவனத்தின் மதிப்பைக் கணக்கிடும் முறை உருவாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஏற்கனவே வாங்கிய கடன்களை ஒழுங்காகத்திருப்பிச்செலுத்தியவர்களுக்கு முத்ரா கடன் வழங்கும் திட்டத்தில் கடன் உச்சவரம்பு ரூ.10 லட்சத்திற்குப் பதிலாக ரூ. 20 லட்சமாக உயர்த்தப்படும் என்றும் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். இந்த அறிவிப்புகளுக்குப் பிறகும் மாற்றான் தாய் மனப்பான்மை தொடர்கிறது. மந்த நிலை நீடிக்கிறது!

### வேலை வாய்ப்புகளை உருவாக்கும் சிறு குறுந்தொழில்கள்

வேலையில்லாத் திண்டாட்டம் கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. ஒன்றிய அரசோ காா்ப்பரேட் தொழில்துறையைவலுப்படுத்தும் போக்கையே சாா்ந்திருக்கிறது. அதன் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என்று கூறிவருகிறது. பெரிய நிறுவனங்களை சாா்ந்திருக்கும் எந்த நாட்டு அரசாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்ற முடியவில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை. சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்தான் அதிக அளவில் வேலை வாய்ப்புகளைக் கொடுத்து வருகின்றன. அடுத்த ஐந்து ஆண்டுகளில் 4 கோடி பேர் வேலை தேடுவார்கள். அவர்களுடன் தற்போது வேலையில்லாமல் இருப்பவர்களையும் சேர்த்தால், வேலையின்மை மிகப் பெரியதாக உருவெடுக்கும்.



 எம்எஸ்எம்இ போன்ற முறைசாரா துறைகளில்தான் இவர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும். எனவே சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் துறைக்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டும். ஆனால் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை எப்போதும் போல காா்ப்பரேட் துறைக்கே முக்கியத்துவம் அளித்திருக்கிறது. இதனால் ஒன்றிய அரசின் எம்எஸ்எம்இ தொடர்பான அறிவிப்புகள், மக்களின் காதில் பூ சுற்றுவதாகவே இருந்துவிட்டது.

### தொழில் கடன்களில் சரிந்த சமூக நீதி!

உயர் சாதி ஏழைகளுக்கு பொருளாதார அடிப்படையில் 10% இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது போல,

201718 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகையில் சமூக ரீதியாக பார்த்தால் முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 63% பெற்றுள்ளனர், இதர பிற்படுத்தப்பட்டோர் 22%, பட்டியலினத்தவர் 11% மற்றும் பழங்குடியினர் 4% பெற்றுள்ளனர்.

இதில், இதர பிற்படுத்தப்பட்டவர்களின் மேம்பாட்டுக்கு என தனித்துறை உருவாக்கி விட்டோம் என்று கூச்சலிட்டாலும், அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப கடன் பகிர்வு அளிக்கப்படவில்லை என்பதே உண்மை.

கிஷோர் திட்டம் (ரூ.50,000 முதல் ரூ.5 லட்சம் வரையிலான கடன் திட்டம்) மற்றும் தருண் (ரூ. 510 லட்சம் வரையிலான கடன் திட்டம்) ஆகிய இரண்டு பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட பெரும்பாலான கடன் தொகைகள் முற்பட்ட பிரிவில் உள்ளவர்களுக்கே சென்றுள்ளன.

உண்மையில், கிஷோர் கடன் திட்டம், 201516ல் உயர் சாதியினருக்கு வழங்கப்பட்ட கடன் தொகைகளின் 73.7 விழுக்காடாகும். இது 201718ல் 76.8 விழுக்காடாக அதிகரித்துள்ளது. அதேபோல, தருண் கடன் திட்டத்தில், உயர் சாதியினருக்கு வழங்கப்பட்ட கடன் தொகை 201516ல் 83.6 விழுக்காடு. இது 201718ல் 88.7 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

### நித்திரையில் முத்ரா கடன்

பெரிதாகப் பேசப்படும் முத்ரா திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து வழங்கப்படும் கடன் தொகையின் தனிநபர் சராசரி வெறும் ரூ.45,203 மட்டுமே. இந்தப் பணத்தைக் கொண்டு என்ன வகையான தொழில்களை உருவாக்க முடியும்? பிரதமருக்கும் நிதி அமைச்சருக்குமே வெளிச்சம்.

முத்ரா திட்டத் தரவுகளின்படி, வழங்கப்பட்ட கடன்களில் ரூ.5 லட்சம் அளவிலான கடன் 1.4 விழுக்காடுதான் வழங்கப்பட்டுள்ளது என்பதே இந்தத் திட்டம் எப்படிப் பட்டது என்பதை உணர்த்தி விடும். நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் அளித்த பதிலில், திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து ஜூன் 2017 வரை ஏறத்தாழ 3.91 மில்லியன் முத்ரா கடன் கணக்குகள் செயல்படாத சொத்துகளாக (NPAs) மாறி விட்டன.

### ஒதுக்கப்பட்ட நிதியிலும் ஓரவஞ்சனை

எம்எஸ்எம்இ தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 22,137 கோடி ஒதுக்கப்படுவதாக கடந்த ஒன்றிய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.

பின்னர், இந்தத் தொகை ரூ. 16,468 கோடியாக குறைக்கப்பட்டது. இந்த நிதியும் கூட முழுமையாக செலவழிக்கப்படவில்லை. கடந்த நவம்பர் வரை ரூ. 3,993 கோடி மட்டும் செலவு செய்யப்பட்டு உள்ளது. இது ஒதுக்கப்பட்ட நிதியில் வெறும் 25% மட்டும்தான்.

சிறு, குறுந்தொழில்களுக்கான திட்டங்களை செயல்படுத்துவதில் ஒன்றிய அரசின் அலட்சியத்தையே இவை படம்பிடித்துக் காட்டுகின்றன.

### இதற்கு என்ன காரணம்?

எம்எஸ்எம்இ தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கான திட்டங்களே ஒன்றிய அரசிடம் இல்லை என்பதுடன், காா்ப்பரேட் நிறுவனங்களை வலுப்படுத்த நாட்டின் வளங்கள் வாரி வழங்கப்படுகின்றன. அணுக்க நண்பர்களான அதானி, அம்பானியை வாழ வைக்க வேண்டும் என்ற வைராக்கியத்தில் பிரதமர் மோடி செயல்பட்டு வருகிறார். இதற்காக அதிக வேலை வாய்ப்புகளை அளித்துவரும் எம்எஸ்எம்இ தொழில்கள் முடங்குவதைப் பற்றி கவலையின்றி இருந்து வருகிறார்.

### என்ன செய்ய வேண்டும்?

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான வங்கி வட்டியை 5 % ஆக குறைக்க வேண்டும். வேறு நிறுவனங்களுக்கு செய்து தரும் பணிகளுக்கான (Job Orders) ஜிஎஸ்டியை 5% ஆக குறைக்க வேண்டும் என்ற நீண்டகால கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. சிறு குறுந்தொழில்களுக்கான எந்திர கொள்முதலுக்கு 15% மானியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் கேட்பாரற்றுக் கிடக்கிறது.

அரசு இத் துறையின் மூலம் உருவாக்கப்படும் உற்பத்தி பொருட்களை கொள்முதல் செய்தால் அது இந்த துறைக்கு மேலும் ஊக்கத்தை தரும் சீன ஏற்றுமதியில் கூட இது போன்ற உற்பத்தி துறையின் பங்களிப்பு தான் மிக அதிகம் அதற்கான உத்தரவாதத்தை அந்த அரசு தந்ததால் தான் அது இன்று ஒரு பலமான வளர்ச்சியை கண்டிருக்கிறது.

ஒன்றுக்கும் உதவாத ஒன்றிய அரசின் செவிகளில் இவை ஏறுமா? சமூக நீதியை, வேலைவாய்ப்பைத் தரும், மக்களின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அவசியமான எம்எஸ்எம்இ துறையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமா?

தொடர்புக்கு: 9444481703

## சிறந்த மருத்துவ சேவைக்காக டாக்டர் எஸ்.ஆர்.அரவிந்த் சந்தோஷுக்கு விருது



சிறந்த குடும்ப நலத்திட்ட சேவைக்கான விருதை, பெருநகர சென்னை மாநகராட்சியின் மேயர் பிரியா ராஜன் அவர்களிடமிருந்து, சென்னை மருத்துவக் கல்லூரியின், மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவத்துறை துணைப் பேராசிரியர் டாக்டர் எஸ்.ஆர்.அரவிந்த் சந்தோஷ், குடியரசு தினமான 26.01.2025 அன்று பெற்றார். துணை மேயர் மு.மகேஷ் குமார் உடன் இருந்தார்.

டாக்டர் எஸ்.ஆர்.அரவிந்த் சந்தோஷ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத், மாநிலக் குழு உறுப்பினர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி ஆகியோரின் மகனாவார்.

இவர் தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவராகச் செயல்பட்டதோடு, சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் நடத்திய ஏராளமான போராட்டங்களிலும் பங்கெடுத்துள்ளார்.

சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான இந்திய டாக்டர்கள் (IDPD) சங்கத்தின் மாணவர் பிரிவு தலைவராகவும் செயல்பட்டுள்ளார். ஐடிபிடியின் மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளிலும் பங்கேற்றுள்ளார்.

மாணவராக இருந்த பொழுதே நுண்ணியிரியல் துறையில், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் திட்டத்தின் கீழ் ஆய்வை மேற்கொண்டவர்.

சிறு நீரகச் செயல் இழப்பிற்கு ஆளான நோயாளிகளுக்கு, இரத்தச் சுத்திகரிப்பிற்கான ஹீமோ டயாலிசிஸ் செய்வதற்காக, இரத்தக் குழாய்களில் பொறுத்தப்படும் குழாய்கள் மூலம் பரவும் தொற்றுகள் குறித்த ஆய்வை மேற்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஆக்கிரமிக்கப்பட்ட பஞ்சமி நிலங்களை மீட்க

## தஓவாஇ மத்திய மண்டலப் பேரவை வலியுறுத்தல்



தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மத்திய மண்டலப் பேரவைக் கூட்டம், தஞ்சாவூர் மாவட்ட அலுவலகத்தில் மண்டலப் பொறுப்பாளர் வீ.கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தஞ்சை மாவட்டப் பொருளாளர் என்.குணசேகரன் முன்னிலை வகித்தார். மாவட்ட தலைவர் அழகு.தியாகராஜன் வரவேற்றார்.

அகில இந்தியச் செயலாளர் த.லெனின், அகில இந்திய மாநாட்டுத் தீர்மானத்தை விளக்கிப் பேசினார். இதில் கட்சியின் தெற்கு மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி, விவசாய சங்க மாவட்டச் செயலாளர் சோ.பாஸ்கர், ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா ஆகியோர் வாழ்த்திப் பேசினர். தஞ்சை தெற்கு இள.குமணன், திருச்சி புறநகர் செல்வராஜ், மயிலாடுதுறை ஜெகதீசன், மாநிலக் குழு உறுப்பினர்கள் சி.பக்கிரிசாமி, பி.குணசேகரன், கவிஞர்கள் சிவலதா, கலைசேகரன், பேராசிரியர் ஓய்வு கோ.பாஸ்கர், அரசுப் பணியாளர் சங்கம் தி.திருநாவுக்கரசு உள்ளிட்டோர் பங்கேற்றனர். முடிவில் இளைஞர் பெருமன்ற மாவட்ட தலைவர் க.காரல் மார்க்ஸ் நன்றி கூறினார்.

பெரியார் மீது தொடர்ந்து அவதூறு கருத்துகளைப் பரப்பி வரும் சீமான் மீது, தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். 1892ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பஞ்சமி நிலம் சம்பந்தமான சட்டத்தின்படி அந்த நிலங்கள் பட்டியல் இனத்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டும், பெரம்பலூர் மாவட்டம் கைகளத்தூர் தலித் இளைஞர் மணிகண்டன் சாதி வெறிப் படுகொலையில், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மொழிப் போர் தியாகிகள் தினக் கூட்டம்

இடதுசாரிகள் பொதுமேடை சார்பில், தஞ்சாவூரில் தமிழ்வழிக் கல்வி இயக்கத்தின் தலைவர் முனைவர் மு.இளமுருகன் தலைமையில் மொழிப்போர் தியாகிகள் தினக் கூட்டம் நடைபெற்றது. ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஆர்.தில்லைவனம், வெ.சேவையா, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற நிர்வாகி கவிஞர் வல்லம் தாஜ்பால் மற்றும் பல்வேறு இயக்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## நெல்லை பி.மதன்மோகன் மறைவு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்ட அலுவலக முன்னாள் பொறுப்பாளர் பி.மதன் மோகன் அவர்களின் இறுதி நிகழ்வில், நெல்லை மாவட்ட ஏஐடியூசி துணைத் தலைவர் ஆர்.ரெங்கன், அலுவலகச் செயலாளர் ஏ.முத்துகிருஷ்ணன், தென்காசி மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் டி.சுப்பையா, புளியங்குடி அலுவலகச் செயலாளர் அய்யனார், முள்ளிகுளம் கிளைச் செயலாளர் மதியழகன் ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

## தருமபுரியில் இரா.முத்தரசன் குடியரசு தினக் கொடி ஏற்றினார்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தருமபுரி மாவட்டக் குழு சார்பில், 76வது குடியரசு தினக் கொடி ஏற்றும் நிகழ்ச்சி, கட்சி அலுவலகம் முன்பு நடைபெற்றது. இதில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கொடி ஏற்றி வைத்தார். பின்னர் குடியரசு தின உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். நிகழ்ச்சியில் மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி, மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் திருப்பூர் ரவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆறுமுகம், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து, மாவட்டச் செயலாளர்கள் தஞ்சாவூர் பாரதி, திருஞானம், தருமபுரி எஸ்.கலைச்செல்வம், சேலம் மோகன், தமிழ்நாடு விவசாயச் சங்க மாநிலத் துணைத் தலைவர் துளசிமணி, தருமபுரி மாவட்ட ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் கே.மணி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## எழுத்தாளர் சாரதா நடராஜன் நூற்றாண்டு விழா நூல்கள் வெளியீட்டு விழா



புதுக்கோட்டையில் பிறந்து தெலுங்கில் அழியா படைப்புகளை வழங்கிய எழுத்தாளர் சாரதா நடராஜன் நூற்றாண்டு விழா, ஜனமித்திரன் இதழ் நூற்றாண்டு விழா மற்றும் நூல்கள் வெளியீட்டு விழா மாவட்டத் தலைவர் எழுத்தாளர் அண்டனூர் சுரா தலைமையில் நடைபெற்றன. ஜனமித்திரன் இதழ் குறித்து ஞானாலயா பா.கிருஷ்ணமூர்த்தி, எழுத்தாளர் சாரதா குறித்து முற்போக்கு எழுத்தாளர் சம்மேளனத்தின் தலைவர் லட்சுமி நாராயணன், பெருமன்றத்தின் மாநிலப் பொதுச்செயலர் த.அறம் ஆகியோர் பேசினர். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் மாவட்டச் செயலர் ஸ்டாலின் சரவணன், அம்பிகா கல்வி அறக்கட்டளை நிறுவனர் சந்திரா ரவீந்திரன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். ராஜேஸ்வரி கோதண்டத்தின் மொழிபெயர்ப்பான கஷ்ட ஜீவி, சாரத நடராஜன் சாகித்ய சிரஞ்சீவி (1924–1955)' நூல், அண்டனூர் சுராவின் 'புதுக்கோட்டை பன்றி நாடு முதல் புதுகை வரை' என்ற நூல், துவாரகா சாமிநாதனின் சப்த கன்னிகள் நூல், அழ.கணேசனின் மூன்று கவிதைத் தொகுப்புகள் ஆகியவை வெளியிடப்பட்டன. இதில் கட்சியின் மாவட்டச் செயலர் த.செங்கோடன், பெருமன்றத்தின் மாநிலக் குழு உறுப்பினர் கோவில் குணா, மாவட்டத் துணைத் தலைவர் ஜீவாதாசன், மாநகரச் செயலர் அடைக்கலம், தலைவர் மூட்டாம்பட்டி ராசு, மாவட்டக் குழு உறுப்பினர்கள் பாலசுப்பிரமணியபாரதி, ஆசிரியர் மாரிமுத்து உள்ளிட்டோரும் பெற்றுக்கொண்டனர். முன்னதாக மாநிலக் குழு உறுப்பினர் மு.சிவானந்தம் வரவேற்றார். மாவட்டப் பொருளாளர் எழுத்தாளர் சோலச்சி அறிமுகவுரை நிகழ்த்தினார். மாவட்டச் செயலர் பாலச்சந்திரன் தொகுத்து வழங்கினார். முடிவில், மாவட்டத் துணைச் செயலர் துவாரகா சுவாமிநாதன் நன்றி கூறினார்.

## க.பரமத்தி வடக்கு ஒன்றியத்தில் கட்சியின் நூற்றாண்டு விழா



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் க.பரமத்தி வடக்கு ஒன்றியக் குழுவின் சார்பில், கட்சியின் நூற்றாண்டு விழாவும், முதுபெரும் தலைவர் ஆர்.நல்லகண்ணு நூற்றாண்டு விழாவும், கட்சியின் மூத்த தோழர்களைக் கௌரவிக்கும் விழாவும் புன்னம் சத்திரம் ஜீவா திடலில், பரமத்தி வடக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் கே.என்.நாட்ராயன் சிறப்புரை ஆற்றினார். ஒன்றியக் குழு உறுப்பினர் வி.சரவணன் வரவேற்றார். விழாவில் மாவட்ட நிர்வாகக் குழு தோழர்கள் கே.குப்புசாமி, எம்.லட்சுமிகாந்தன் மற்றும் மாவட்டக் குழு உறுப்பினர்கள் கே.எஸ்.நேதாஜி, பி.பாலன், ஆர்.தங்கவேல், எம்.பி.செல்வம், என்.ராமசாமி, ஜி.பி.எஸ்.வடிவேலன் ஆகியோர் உரையாற்றினர். ஏராளமான கட்சித் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## கூலி உயர்வு வழங்கக் கோரி நெசவாளர்கள் முற்றுகைப் போராட்டம்



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டம், சக்கம்பட்டி மற்றும் டி.சுப்புலாபுரம் பகுதியில், விசைத்தறி தொழிலாளர்கள் 50% கூலி உயர்வு உள்பட 12 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி 01.01.2025 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். 13.01.25 அன்று தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த பேச்சுவார்த்தையில் உரிமையாளர்கள், அதிகாரிகள் நடந்து கொண்ட விதம் தொழிலாளர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. இந்நிலையில் 21.01.2025 அன்று திண்டுக்கல் தொழிலாளர் நலத்துறை அலுவலகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையும் தோல்வியடைந்தது. இதனைக் கண்டித்து 23.01.2025 அன்று அனைத்துச் சங்கப் போராட்டக் குழு சார்பில், ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு வட்டாட்சியரிடம் கோரிக்கை மனு அளிக்கபட்டது. ஏஐடியுசி சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.வி.அழகிரிசாமி, கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் வே.பரமேஸ்வரன், ஏஐடியுசி நெசவாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் தி.சென்றாயப்பெருமாள், கட்சியின் ஒன்றியச் செயலாளர் பா.பிச்சைமணி, ஒன்றியக் குழு உறுப்பினர் க.பழனிச்சாமி, நகரச் செயலாளர் க.முனீஸ்வரன், நகர துணைச் செயலாளர் பா.அண்ணாமலை, ஏஐஓய்எப் ஒன்றியச் செயலாளர் ஜனசக்தி பிரபாகரன் மற்றும் சிஐடியு சார்பில் எம்.ராமர், எல்பிஎப் சார்பில் செல்வராஜ், ஏடிபி சார்பில் சேட் பா.அருணாசலம், ஐஎன்டியூசி சார்பில் வி. வேல்மணி, பிஎம்எஸ்பி.வெங்கடேஷ் உள்ளிட்டோர் முற்றுகைப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

## சமுசிகாபுரம் ஊராட்சியை இராஜபாளையம் நகராட்சியுடன் இணைக்கக் கூடாது அனைத்துக்கட்சி சார்பில் மனு



விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் நகராட்சியுடன் சமுசிகாபுரம் ஊராட்சியை இணைக்கக் கூடாது என்று, சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் எ.ஆர்.ஆர்.இரகுராமன் தலைமையில் மாவட்ட ஆட்சியரிடம், அனைத்துக் கட்சி சார்பில் மனு வழங்கப்பட்டது. இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பழனிக்குமார், செந்தில்குமார், பாலமுருகன், முத்துமாரி, இராமச்சந்திரன், சக்கணன், சிபிஎம் மாவட்டச் செயலாளர் குருசாமி, அதிமுக முருகானந்தம், நெசவாளர் முன்னேற்றக் கழக சிவலிங்கம் உள்ளிட்டோர் மாவட்ட வருவாய் அலுவலர் இராஜேந்திரன் அவர்களிடம் மனு வழங்கினார்கள்.

## போதைக் கலாச்சாரத்தை ஒழிக்க வேண்டும்! இளைஞர் பெருமன்ற தஞ்சை வடக்கு மாவட்ட மாநாட்டில் தீர்மானம்.




அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தஞ்சை வடக்கு மாவட்ட 18 வது மாநாடு கும்பகோணத்தில் எஸ்.இலங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை தொடக்கி வைத்து திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து உரையாற்றினார். கொடியினை மாநிலத் துணைத் தலைவர் கு.ராஜேந்திரன் ஏற்றி வைத்துச் சிறப்புரையாற்றினார்.

மாவட்ட தலைவராக அகின்சீனிவாசன், துணைத்தலைவர்களாக எஸ்.விஜயகுமார் ஆர்.சற்குணம், மாவட்டச் செயலாளராக ஆர்.மாதாமணி, துணைச் செயலாளர்களாக ஆர்.பிரதீப் குமார் ஏ.வீரமணி, மாவட்டப் பொருளாளராக எம்.லோகநாதன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். புதிய நிர்வாகிகளை அறிமுகப்படுத்திக் கட்சியின் மாவட்டச் செயலாளர் மு.அ.பாரதி பேசினார். தனியார் துறையிலும் இட ஒதுக்கீட்டிற்குப் புதிய சட்டம் இயற்ற வேண்டும். சாதி மறுப்புத் திருமணங்களினால் ஏற்படும் ஆணவக்கொலை யினைத் தடுத்து நிறுத்துவதுடன், இதற்குக் காரணமாகவும், தூண்டுதலாகவும் உள்ள சமூக விரோதக் கும்பல்கள் மீது தனிச் சட்டம் இயற்றிக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். போதைக் கலாச்சாரத்தை ஒழித்து தமிழ்நாட்டில் படிப்படியாக மதுபானக் கடைகளை மூட வேண்டும். தமிழ்நாட்டை மதுவில்லாத் தமிழகமாக மாற்ற வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. புதிய மாவட்டச் செயலாளர் ஆர்.மாதாமணி நன்றி கூறினார்.

## இளைஞர் பெருமன்றம் 21ம் ஆண்டு பொங்கல் விளையாட்டு விழா

கட்சி நூற்றாண்டு துவக்க விழா, கோவை வடக்கு மண்டலம் மணியகாரன்பாளையம் கிளை 65ம் ஆண்டு துவக்க விழா, இளைஞர் பெருமன்றம் 21ம் ஆண்டு பொங்கல் விளையாட்டு விழா, ஜீவா திடலில் ஏஐஒய்எப் மாநிலக் குழு உறுப்பினர் என்.ஜீவானந்தம் தலைமையில், கிளைச் செயலாளர் எம்.ராமர் வரவேற்புரை ஆற்றினார். இளைஞர் பெருமன்றக் கொடியை, கட்டடச் சங்கப் பொதுச் செயலாளர் என்.செல்வராஜ் ஏற்றினார். மணியகாரன்பாளையம் ஆர்.காளிச்சாமி குழுவினரின் நாதஸ்வரம், தவுல் நிகழ்ச்சி நடைபெற்றது. ஏஐஒய்எப் வடக்கு மண்டல அமைப்பாளர் எஸ்.வெற்றிவேந்தன் போட்டியைத் தொடங்கி வைத்தார்.

மறைந்த மூத்த தோழர் ஏ.பி.ராமசாமி மனைவி ராமத்தாள், மகள் செல்வி, நடராஜன் மனைவி நாச்சம்மாள் ஆகிய மூத்த தோழர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. தோழர் ஆர்.நடராஜன் நினைவுக் கோப்பை வழங்கப்பட்டது. 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். ஏஐஒய்எப் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள். மௌ.குணசேகர், கே.அஸ்வினி, மாமன்ற உறுப்பினர் வி.ராமமூர்த்தி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## வேலையில்லா கால நிவாரணமாக ரூ.10,000 வழங்க ஏஐஒய்எப் அரூர் வட்டாரப் பேரவை வலியுறுத்தல்

வேலையில்லா கால நிவாரணமாக ரூ.10,000 வழங்க ஏஐஒய்எப் அரூர் வட்டாரப் பேரவை வலியுறுத்தல்

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் அரூர் வட்டாரப் பேரவைக் கூட்டம் முத்துமணி தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன், மாநிலக் குழு உறுப்பினர் கமலா மூர்த்தி, நகரச் செயலாளர் பா.முருகன், ஒன்றியச் செயலாளர் சி.சிற்றரசு ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். மாநாட்டில் ஒன்றியத் தலைவராக கே.பரமேஸ், ஒன்றியச் செயலாளராக முத்துமணி, பொருளாளராக பிரபு, துணைத் தலைவர்களாக இராமன், கிரி, சக்தி, துணைச் செயலாளர்களாக அருண்சங்கமேஷ்வர், அப்புதிராஜ், சுமன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

படித்த அனைவருக்கும் வேலை, வேலையில்லா கால நிவாரணமாக ரூ.10,000 வழங்க வேண்டும். தனியார்துறை நிறுவனங்களில் இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வினாடி – வினா விடைகள்

1. 1921 ஆம் ஆண்டு ஜூன் 22 முதல் ஜூலை 12
2. 55 நாடுகளைச் சேர்ந்த 600 பிரதிநிதிகள்
3. கம்யூனிஸ்ட் அகிலத்தின் செயற்குழு உறுப்பினர்
4. பெண்கள் மத்தியில் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைமுறைகளும் வடிவங்களும்
5. அகிலத்துக்கான சர்வதேச மகளிர் செயலகம்
6. சர்வதேச கம்யூனிட் மகளிர் இரண்டாவது பேராயம்

## நூல் அறிமுக விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சென்னை மாவட்ட குழு மற்றும் ஒய்எம்சிஏ பட்டிமன்றம் இணைந்து நடத்தும் நூல் அறிமுக விழா 17.12.2024 அன்று சிறப்பாக நடைபெற்றது. முனைவர் யாழினி முனுசாமி தலைமையில், ஒய்எம்சிஏ பட்டிமன்றப் பொதுச் செயலாளர் முனைவர் ப.தாமரைக்கண்ணன் வரவேற்புரை ஆற்றினார். சென்னை மாவட்டச் செயலாளர் கணபதி இளங்கோ அறிமுக உரை நிகழ்த்தினார். பேராசிரியர் மு.கோகுலசாமி நூல் அறிமுக உரை நிகழ்த்தினார் எழுத்தாளர் பேராசிரியர் அமிர்தவள்ளி ஏற்புரை வழங்கினார். பேராசிரியர் முத்துக் கிருஷ்ணன் நன்றி நவின்றார். திரளான தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

## பொன்னமராவதியில் மக்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், பொன்னமராவதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய துணைச் செயலாளர் டி.கருணாமூர்த்தி தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் த.செங்கோடன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஏனாதி ஏ.எல்.இராசு, மாவட்டப் பொருளாளர் என்.ஆர்.ஜீவானந்தம், விவசாயத் தொழிலாளர் சங்க ஒன்றியத் தலைவர் சுப.தங்கமணி ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். ஆர்ப்பாட்டத்தில் பொன்னமராவதியில் கோட்டாட்சியர் அலுவலகம் திறக்கப்பட வேண்டும். பொன்னமராவதி தாலுகாவில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டும். காரையூர் காவல் நிலையத்தினைப் பொதுமக்களின நலன்கருதி மீண்டும் பொன்னமராவதி காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். பொன்னமராவதி பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்தவேண்டும் என்பன உள்ளிட்ட கோரிர்கைகளை வலியுறுத்தி முழக்கமிடப்பட்டது.

## புதிய தொழிலாளர் சட்டங்களை ரத்து செய்! பிப்ரவரி நாடாளுமன்ற முற்றுகையில் பங்கேற்க முடிவு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கம் தீர்மானம்

புதிய தொழிலாளர் சட்டங்களை ரத்து செய்ய வலியுறுத்தி பிப்ரவரியில் நடைபெறும் நாடாளுமன்ற முற்றுகைப் போராட்டத்தில் பங்கேற்பது என ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் சிறப்புப் பேரவை தீர்மானித்துள்ளது.

தமிழ்நாடுஏஐடியுசிகட்டடத்தொழிலாளர்சங்கத்தின்மாநிலநிர்வாகக்குழுமற்றும் மாநிலப் பிரதிநிதிகள் சிறப்புப் பேரவைக் கூட்டம் திருச்சியில், மாநிலத் தலைவர் கே.இரவி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தை தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார்.

சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் என்.செல்வராஜ் செயல்பாட்டு அறிக்கை முன் வைத்தார், துணைப் பொதுச் செயலாளர் எம்.முனுசாமி சங்கத்தின் துணை விதிகளில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பான தீர்மானங்களை முன்வைத்தார். திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் எம்.பி. பிரதிநிதிகள் சிறப்புப் பேரவையை நிறைவு செய்து சிறப்புரையாற்றினார்.

மாநில நிர்வாகிகள் எம்.முனுசாமி, இரா.முருகன், ஆர்.துரைசாமி, மாமன்ற உறுப்பினர் கே.சுரேஷ், ஆர்.பாலகிருஷ்ணன், ஜிபிஎஸ் வடிவேலன், எஸ்.கவிதா, எஸ்.சேது, எஸ்.சின்னசாமி, ஜி.பாலன், ஆர்.தில்லைவனம், சி.நந்தினி, ஏ.எஸ்.சங்கர் மேஸ்திரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். 38 மாவட்டங்களில் இருந்து, கட்டுமானத் தொழிலாளர்களால் தேர்வு செய்யப்பட்ட 300க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சங்கத்தின் திருச்சி மாவட்டச் செயலாளர் சி.செல்வகுமார் நன்றி தெரிவித்தார். தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் ஆறாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் நிதியிருப்பு உள்ளது.

ஆகவே, நலவாரியத்தில் பதிவு செய்துள்ளஅனைத்துக் கட்டட, கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் புதுச்சேரி மாநிலத்தில் வழங்குவது போல் தீபாவளி போனஸ் ரூபாய் 5000 வழங்க வேண்டும்.

கட்டுமான மதிப்பீட்டில் வசூலிக்கப்படும் நலவரியை 1% விருந்து 5% ஆக உயர்த்த வேண்டும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரியச் செயல்பாடு குறித்து விவாதிப்பதற்காகக் கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் சிறப்புக் கூட்டத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும்.

சொந்த வீடு இல்லாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்குப் பத்தாயிரம் வீடுகள் அடுக்குமாடிக் குடியிருப்பு அல்லது வீடு கட்ட ரூபாய் 4 லட்சம் உதவி வழங்கப்படும் திட்ட விண்ணப்பிப்பதில் ஏராளமான இடையூறுகளை அதிகாரிகள் விதிப்பதால் நான்கு ஆண்டுகளில் 300 வீடுகள் கூட வழங்கப்படவில்லை. எனவே, முதலமைச்சர் தலையிட்டு அறிவிக்கப்பட்டபடி வீடுகள் வழங்கப்பட வேண்டும்.

புதிய தொழிலாளர் சட்டங்களை ரத்து செய்ய வலியுறுத்தி, நாடாளுமன்ற முற்றுகைப் போராட்டத்திற்கு ஏஐடியுசி தேசியத் தலைமை அழைப்பு விடுத்துள்ளது. இதனை ஏற்று தமிழ்நாட்டில் இருந்து ஐந்தாயிரம் கட்டுமானத் தொழிலாளர்கள் பங்கேற்பது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்க சிறப்புப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

## கோவை வேலாண்டிபாளையம் கலா மன்றத்தின் பவள விழா




1950 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட கோவை வேலாண்டிபாளையம் கலா மன்றத்தின் பவள விழா மற்றும் பொங்கல் விழா, விளையாட்டுப் போட்டிகள், முன்னோடித் தோழர்களின் குடும்பத்தினரை கவுரவித்தல், பரிசளிப்பு நிகழ்வு என கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. நிகழ்வில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கலந்து கொண்டு கலா மன்றத்தின் முன்னோடிகளின் குடும்பத்தினர் மற்றும் முன்னோடித் தோழர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி கவுரவித்தார்.

இரா.முத்தரசன் தனது சிறப்புரையில், 75 ஆண்டுகாலப் பயணத்தில் கலா மன்றம் ஆற்றியுள்ள மக்கட் சேவைகளைக் குறிப்பிட்டுப் பாராட்டினார்.

அது தனது பல கனவுகளை நிறைவேற்றி இந்தப் பகுதி மக்களின் மனதில் இடம் பெற்றிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

அதுபோல, நூற்றாண்டு விழா காணும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், நாட்டின் அரசியல் விடுதலையுடன், பொருளாதார விடுதலை, சமூக விடுதலை ஆகியவற்றை அடையும் கனவிருந்தது. அந்த முழு விடுதலைக்கான போராட்டம் தொடர்கிறது. மதச்சார்பின்மை லட்சியத்திற்காக இறுதிக் காலம் வரை போராடி, அதற்காகவே தனது இன்னுயிரை இழந்த மகாத்மா காந்தி உயர்த்திப் பிடித்த மதநல்லிணக்கத்தைப் பாதுகாக்க இந்நாளில் உறுதியெடுப்போம் என்றார். கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி, மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், எஸ்.ராதாகிருஷ்ணன், கே.புருசோத்தமன், கலா மன்ற முன்னோடி ஆர்.லட்சுமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## ஆண்டிபட்டி பேரூராட்சியில் சிபிஐ கவுன்சிலர் மீனாட்சி போராட்டம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின், ஆண்டிபட்டி பேரூராட்சி 10வது வார்டு கவுன்சிலர் மீனாட்சி முனீஸ்வரன், பொதுமக்களின் அடிப்படைக் கோரிக்கையை முன்வைத்து தொடர்ந்து போராடி வருவதால் மீனாட்சி முனீஸ்வரன் அவர்களுக்கு பேரூராட்சி மன்றக் கூட்டத்திற்குத் தகவல் தெரிவிக்காமலும், தீர்மானங்களை முன் வழங்காமலும் வேண்டுமென்றே புறக்கணித்து வரும் பேரூராட்சி தலைவர் மற்றும் நிர்வாகத்தைக் கண்டித்து 31.12.2024 அன்று நடைபெற்ற பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் கறுப்புத் துண்டு அணிந்து உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இந்தப் போராட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர்

வே.பரமேஸ்வரன், ஒன்றியச் செயலாளர் பா.பிச்சைமணி, நகரச் செயலாளர் க.முனீஸ்வரன், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் க.பழனிச்சாமி, மு.பிரபாகரன், நகரத் துணைச் செயலாளர் பா.அண்ணாமலை மற்றும் பொது மக்கள்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.



## மாணவர் இயக்க வரலாறும் கம்யூனிசமும் ஏஐஎஸ்எப் தென் சென்னை சிறப்புக் கருத்தரங்கம்



மாணவர் இயக்க வரலாறும் கம்யூனிசமும் என்ற கருத்தரங்கை தென்சென்னை மாவட்ட மாணவர் பெருமன்றம், மாவட்டச் செயலாளர் மணிகண்டன்தலைமையில் நடைபெற்றது. இதில் திரளான மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் தென்சென்னை ஏஐஎஸ்எப் போராட்ட வரலாற்றைச்சித்தரிக்கும்புகைப்படக்கண்காட்சிதிறந்துவைக்கப்பட்டது. ஏஐஎஸ்எப் மாணவர்கள் உருவாக்கிய சே.காஸ்ட்ரோ கலைக்குழுவின் பறை இசை, நடனத்துடன் மேடை நிகழ்வுகள் தொடங்கின. மாணவர்களே எழுதி இசையமைத்து பாடிய நான்கு பாடல்கள் நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக அமைந்தன. பாடகர் இசைவாணியின் “I am Sorry Iyyappa” பாடலை 10 தோழர்கள் இணைந்து பாடிய போது அரங்கம் அதிர்ந்தது. கட்சியின் மாநில துணைச் செயலாளர் மூ.வீரபாண்டியன், ஏஐஎஸ்எப் மாநிலச் செயலாளர் தினேஷ், தென் சென்னை இஸ்காப் துணைத் தலைவர் மதுர் சத்யா ஆகியோர் கருத்துரை ஆற்றினர். கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா வாழ்த்துரை வழங்கினார்.

## இளைஞர் பெருமன்ற திருவண்ணாமலை மாவட்டப் பேரவை



அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற திருவண்ணாமலை மாவட்டப் பேரவைக் கூட்டம் சர்தார் தலைமையில் நடைபெற்றது. கொடியை எஸ்.செல்வம் ஏற்றி வைத்தார். அஞ்சலித் தீர்மானத்தை ஜி.பிலிப்ராஜ் வாசித்தார். பி.யுவராஜ் வரவேற்புரை ஆற்றினார். ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் எம்.எஸ். மாதேஸ்வரன் பேரவைக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார். அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் த.இப்ராஹிம் சிறப்புரை ஆற்றினார். கட்சியின் மாவட்டச் செயலாளர் இரா.தங்கராஜ் நிறைவுரை ஆற்றினார்.

இதில் மாவட்ட தலைவராக எம்.குமரவேல், மாவட்டச் செயலாளராக பி.யுவராஜ், மாவட்டப் பொருளாளராக எஸ்.விக்னேஷ், மாவட்ட துணைத் தலைவர்களாக எஸ்.செல்வம், எஸ்.அரவிந்த், மாவட்ட துணைச் செயலாளர்களாக எஸ்.கார்த்திக் ஏ.கோவிந்தசாமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## ஜனசக்தி வளர்ச்சி நிதி



விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் ஏஐடியுசி டாக்சி வேன் ஓட்டுநர் உரிமையாளர் சங்க வெள்ளி விழா, தலைவர் ஆறுமுகசாமி தலைமையில் இராஜபாளையத்தில் நடைபெற்றது. செயலாளர் கோபாலகிருஷ்ணன் வரவேற்றார். கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் தி.இராயசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி, பொன்னு பாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, நிர்வாகக் குழு உறுப்பினர் வி.இரவி, ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் முத்துமாரி, நகரச் செயலாளர் விஜயன், தெற்கு ஒன்றியச் செயலாளர் இராமச்சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.2,000 வழங்கப்பட்டது.

## கல்வியை மாநிலப் பட்டியலுக்குள் கொண்டுவர வேண்டும் தருமபுரியில் இரா.முத்தரசன் பேட்டி

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் 18 வது மாநில மாநாடு தருமபுரியில் நடைபெறுவதை ஒட்டி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தருமபுரில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

அப்போது இந்திய விடுதலைக்கு முன்பே 1936ம் ஆண்டு லக்னோவில் மாணவர் அமைப்பு தொடங்கப்பட்டது. 1959ம் ஆண்டு அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் தொடங்கப்பட்டது. அதன் முதல் தலைவராக வாசுதேவன் நாயர் தேர்வு செய்யப்பட்டுப் பணியாற்றினார். பின்னர் இவர் கேரள மாநில முதல்வரானார் என்பது குறிப்பிடத்தக்கது.

தருமபுரியில் மாநில மாநாடு நடைபெறுகிறது. ஜனவரி 26ந் தேதி மாலை பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் பங்கேற்கும் பேரணியும், அதனைத் தொடர்ந்து பொதுக் கூட்டமும் நடைபெறுகிறது. ஜனவரி 26ந் தேதி மாநாடு நடத்துவதன் நோக்கம் என்னவென்றால் 1930–1947ம் வரை பரிபூரண சுதந்திரம் வேண்டி போராட்டம் நடத்தப்பட்டது. அதன் விளைவாக 1950ல் குடியரசு தினம் கொண்டாடப்பட்டது.அதை



நினைவுகூறும் விதமாக மாநில மாநாடு நடத்தப்படுகிறது.

அனைவருக்கும் இலவசக் கல்வி கொடுக்கவேண்டும்.

ஆனால், மத்திய அரசு நீட் தேர்வைப் புகுத்தி, தனியார் பயிற்சி நிறுவனங்கள் கொள்ளை அடிப்பதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் சாதாரண ஏழைகள், கிராமப்புற மாணவர்களின் மருத்துவப் படிப்பு கனவாகிவிட்டது. ஒடுக்கப்பட்டவர்கள், ஏழைகள் கற்கக் கூடாது என்ற நோக்கத்தில் தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரில் திணிக்கின்றனர். பல்கலைகழகங்களுக்கு யூஜிசி தேடுதல் குழுவை அமைத்துள்ளது. இதில் மாநில அரசுக்கு உள்ள அதிகாரங்களைக் குறைத்துள்ளது. ஆர்எஸ்எஸ் கொள்கைகளைப் புகுத்தும் ஏற்பாடு.

இது மிகவும் அபாயகரமானது. எனவே, கல்வியை மாநிலப் பட்டியலில் கொண்டுவர வேண்டும். தமிழகத்தில் 8 பல்கலைகழகங்களில் துணைவேந்தர்கள் கிடையாது.

காரணம் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் கவர்னரிடம் உள்ளது. எனவே, துணைவேந்தர்களை மாநில முதல்வர்களே நியமிக்கும் அதிகாரம் வேண்டும்.

பிரதமர் முதல் அமைச்சர்கள் வரை யாரும் தனியாக முடிவு எடுக்க முடியாது. அனைத்தையும் முடிவு செய்யக் கூடியது ஆர்எஸ்எஸ் அமைப்புதான். அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக மத்திய அரசு செயல்படுகிறது. சர்வாதிகார வழியில் நாட்டை நடத்துகின்றனர் என்றார்.

பேட்டியின் போது மாநிலத் துணைச்செயலாளர் நா.பெரியசாமி, மாநிலச் செயற்குழு உறுப்பினர் சிவபுண்ணியம், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம், தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்க மாநில கவுரவ தலைவர் ந.நஞ்சப்பன், இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க.பாரதி உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## நரசிங்கம் கிராமத்தை மதுரை மாநகராட்சியுடன் இணைப்பதைக் கண்டித்து மாவட்ட ஆட்சியரிடம் மனு



வளர்ச்சி அடையாத கிராமமான நரசிங்கத்தை மாநகராட்சியுடன் இணைக்கக் கூடாது என்பதை வலியுறுத்தி, கிராமப் பொதுமக்கள் சார்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுக்கும் போராட்டம் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் பா.காளிதாஸ் மாவட்டச் செயலாளர் பி.முத்துவேல், விதொசா மாநிலக் குழு உறுப்பினர் பூமிநாதன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் கா.கிருஷ்பாக்கியம் ஆகியோர் பங்கேற்றனர்.

## 11 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி வருவாய்த்துறை அலுவலர்கள் சங்கம் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு வருவாய்த்துறை பதவி உயர்வு அலுவலர்கள் சங்கம் சார்பில், 11 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தருமபுரி ஆட்சியர் அலுவலகம் முன்பு, மாவட்ட தலைவர் கோ.குமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




மாவட்டச் செயலாளர் அ.ஜெயபிரசாத் வரவேற்றார்.தமிழ்நாடு வருவாய்த்துறை பதவி உயர்வு அலுவலர் சங்க மாநிலத் தலைவர் இரா.இராமச்சந்திரன், தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்க மாநில துணைப் பொதுச் செயலாளர் கே.பாஸ்கரன், ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் கே.மணி, மாநில துணைத் தலைவர் கிருஷ்ணன், மாவட்ட தலைவர் அகிலன் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார்கள்.

வருவாய்த்துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்குக் குறைதீர் கூட்டத்தை நடத்த வேண்டும். கலந்தாய்வு மூலம் பணியிட மாறுதல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாணை வெளியிடுவதற்கு முன்பு பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட 11 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தினர். ஆர்ப்பாட்டத்தில் மாவட்டப் பொருளாளர் சிவதாஸ், உள்ளாட்சிப் பணியாளர் சங்க மாவட்ட தலைவர் மனோகரன், மகளிர் அணிச் செயலாளர் சத்தியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஒப்பந்த முறையில் ஓட்டுநர், நடத்துநர் நியமனம் போக்குவரத்து ஏஐடியுசி கண்டனம்

கோவையில் அரசு போக்குவரத்துக் கழகத்தில் ஒப்பந்த முறையில் ஓட்டுநர், நடத்துனர் நியமனம் செய்வதற்குப் போக்குவரத்து ஏஐடியுசி கண்டனம் தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டில் தனியார் வசம் இருந்து தனியார் பயணிகள் போக்குவரத்து சாதாரண அடித்தட்டு மக்கள் பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்தில், 1972 ம் ஆண்டு நாட்டுடைமையாக்கப்பட்டது. அரசு போக்குவரத்துப் பேருந்துகள்தான் கடைகோடி கிராமத்திற்கும் சேவையாற்றி வருகின்றன. அரசு போக்குவரத்துக் கழகத்தில் 50 ஆண்டுகளில், சுமார் 10 லட்சம் பேர் இட ஒதுக்கீட்டின் மூலம் பயன்பெற்று வேலைவாய்ப்பினைப் பெற்று வாழ்நிலையில் உயர்ந்துள்ளனர். கடந்த திமுக ஆட்சியின் போது பேருந்துகளுக்குத் தேவையான பணியாளர் விகிதத்தை விட, கூடுதலான பணியாளர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நியமனம் செய்யப்பட்டனர். அத்தகைய காத்திருக்கும் பணியாளர்கள் என்ற பெயரால் பணியில் அமர்த்தி, பின்னர் பணியாளர் விகிதப்படி தினக்கூலி உத்தரவு வழங்கப்பட்டு 240 நாட்களில் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர். தற்போது கோவை கோட்டத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, எட்டு மணி நேரப் பணிக்குச் சம்பளம் ஓட்டுநருக்கு ரூ.1041யும், நடத்துனருக்கு 1030யும், சம்பளத்தில் 148 ஓட்டுநர்கள், 175 நடத்துனர்களும் நியமனம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. தற்போது ஒரு பேருந்து இயக்குவதற்கு 5.93 நபர்கள் என்ற பணியாளர் விகிதத்தில் ஒருலட்சத்து 11 ஆயிரம் பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். 1977 ஆம் ஆண்டு பட்டாபிராமன் குழு அறிக்கையின் பரிந்துரைப்படி ஒரு பேருந்துவுக்கு 7.5 நபர்கள் என்ற அளவில், 20,000 பேருந்துகளை இயக்கிட ஒருலட்சத்து 50 ஆயிரம் தொழிலாளர்கள் தேவை, 39 ஆயிரம் தொழிலாளர்கள் பற்றாக்குறை உள்ளது. காலிப் பணியிடங்களை நிரப்பிடக்கோரி ஏஐடியுசி தமிழக முதல்வருக்குக் கோரிக்கை வைத்து தொடர்ந்து போராடி வருகின்றது. பணியாளர் பற்றாக்குறை காரணமாகப் பேருந்துகளை இயக்க முடியவில்லை. அரசு சாலைப் போக்குவரத்து நிறுவனம் மூலம் ஓட்டுதல் திறன் பயிற்சி பெற்ற இளைஞர்கள் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருக்கின்றனர். நிரந்தரத்தன்மை உள்ள பணியில் நேரடி நியமனம் மூலம் வேலைவாய்ப்பு வழங்கினால். அவர்களது எதிர்காலம் நம்பிக்கை உடையதாக இருக்கும். ஒப்பந்த முறை நியமனம் செய்வது இடைத்தரகர்கள் லாபம் பெறவே வழி வகுக்கும். ஊழல் ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும். அரசுக்கு அவப்பெயர் உருவாக்கும். ஒப்பந்த முறை அனுமதிக்கக் கூடாது என கடந்த கால 12(3) ஒப்பந்தங்களும் தொழிற்சங்கங்களோடு ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது நடைமுறையில் உள்ள நிலை ஆணை விதிகளிலும் அதற்கு இடமில்லை. எனவே, ஒப்பந்த முறை மூலம் கோவை கோட்டத்தில் பணி நியமனம் செய்வதைக் கைவிட வேண்டும். நிரந்தரத்தன்மை உள்ள ஓட்டுநர் நடத்துநர் பணி நியமனம் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருக்கும் இளைஞர்களுக்கும், இறந்து போன தொழிலாளர்களின் வாரிசுகளுக்கும் வேலைவாய்ப்பை வழங்கிட வேண்டும் என ஏஐடியுசி சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம் எனத் தங்களது அறிக்கையில் கூறியுள்ளனர்.

இக்கதையின் முக்கிய நகர்வுகளாக (1) செட்டியாரிடம் சங்கப் பள்ளர் வைத்த வேண்டுகோள் (2) சங்கப்பள்ளர் இறப்பு (3)அவருக்குக் கோடிபோடச் செட்டியார் செல்லல் என மூன்று நகர்வுகள் அமைகின்றன. இறுதியாகச் செட்டியாரின் மரணத்துடன் கதை முடிவடைகிறது.



ஆ.சிவசுப்பிரமணியன்

# வகைமாதிரிப் பாத்திரமும் மரபு மீறிய பாத்திரமும்

**சென்ற இதழில் தூங்காச் செட்டியார், சங்கப்பள்ளர் என்று இருவருக்கும் இடையே முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நிலவிய சாதிகடந்த நட்புறவு குறித்து மேலோட்டமாக அறிந்து கொண்டோம். இந்த இதழில் அது சாதிமரபு மீறிய ஒன்றாக வெளிப்பட்டமை குறித்து சற்று விரிவாகக் காண்போம்.**

கதையின் தொடக்கத்திலேயே இதை ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

“ஒவ்வொரு வருடமும் தைப்பொங்கல் நாளன்று சங்கப்பள்ளரின் பண்ணைக்குப் போய்விடு வார் தூங்காச்செட்டி. முதல்நாள் வட்டாரத்திலிருந்து பொங்கல் சீர் எனப் பச்சரிசி பருப்பு, வெல்லம், வாழைப்பழம், தேங்காய் என மூன்று தட்டுகளில் எடுத்துச் செல்வார். மாட்டுவண்டியில் கரும்பு கட்டுக் கட்டாகப் போகும். வட்டாரத் திலிருந்து பொங்கல் சீர் வருகிறதென்றால் பள்ளத்தெருவே பரபரப்பாகிவிடும்.”





வீடு தேடிச்சென்று பொங்கல்படி கொடுப்தென்பது இன்றும் கூட நம் சமூக அமைப்பில் பொருள் பொதிந்த ஒன்றாக நிலவுகிறது. சமமான நிலை அல்லது குடும்ப உறவின் அடிப்படையிலான சடங்கு உயர்ந்தோன் தாழ்ந்தோன் என்று சமூகப்படிநிலை என்பனவற்றுள் ஒன்றைச் சுட்டுவதாக இது அமைகிறது. இக்கதையில் இடம் பெறும் இந்நிகழ்வு இருவருக்கும் இடையிலான சாதிகடந்த நட்புறவின் வெளிப்பாடாகவும் சமநிலையின் வெளிப்பாடாகவும் இடம் பெற்றுள்ளது.

இக்கதையின் முக்கிய நகர்வுகளாக (1) செட்டியாரிடம் சங்கப் பள்ளர் வைத்த வேண்டுகோள் (2) சங்கப்பள்ளர் இறப்பு (3)அவருக்குக் கோடிபோடச் செட்டியார் செல்லல் என மூன்று நகர்வுகள் அமைகின்றன. இறுதியாகச் செட்டியாரின் மரணத்துடன் கதை முடிவடைகிறது.

## சங்கப் பள்ளரின் வேண்டுகோள்:

ஒரு பட்டிப் பொங்கல் (கால் நடைகளை அடைக்கும் தொழுவத்தில் நிகழும் பொங்கலிடுதல்) அன்று சங்கப்பள்ளர் செட்டியாரிடம் பின்வரும் வேண்டுகோள்களை முன்வைத்தார். முதலாவதாக அவர் முன்வைத்த வேண்டுகோள், “இன்னமே ஒவ்வொரு வருஷமும் சித்திரை சாமி கும்புடுக்குக் கெடா வெட்றப்ப உங்க வட்டாரத்துச் சனங்களுக்குன்னு நா தனியா ஒரு கெடா வெட்டிச் சோறு போடனும் அதெ ஒங்க சொந்த பந்தமெல்லாம் வந்து சாப்பிட்டாத்தான் எம் மனசு நெறையும். இது நம்ம காலத்தோட முடிஞ்சிரக்கூடாது. வட்டாரம் உள்ளவரைக்கும் இதுல எந்த மாத்தமுமில்லாம நடக்கணும். அதுக்கு நீங்க வாக்குக் கொடுத்தா போதும்.”

இரண்டாவதாக சங்கப்பள்ளர் “நாஞ் செத்தா வட்டாரத்துலயிருந்து ஒங்க கோடி வரனும். வட்டாரத்துல யாரும் தவறிட்டாகன்னா பள்ளத் தெருவுலயிருந்து கோடி போடுவோம். எங்களய வேத்தாளா பிரிச்சுப் பாக்கக் கூடாது இதுக்கு நீங்க வாக்குக் கொடுக்கனும்” இவ்விரண்டு வேண்டுகோள்களையும் எவ்விதத் தயக்கமும் இன்றி ஏற்றுக் கொண்ட செட்டியார், சாமி கும்பிட வைத்த வெற்றிலைப் பாக்கை சங்கப் பள்ளர் கையில் கொடுத்து “இது சத்தியவாக்கு நீ கேட்டுக்கிட்டதுக்கு நானும் எஞ்சந்ததியும் கட்டுப்படறோம் எப்பவும் மாறமாட்டோம்” என்றார்.

## சங்கப்பள்ளர் இறப்பு:

இந்நிகழ்வு நடந்த சிலநாட்களில் சங்கப்பள்ளர் இறந்து போனார். இயல்பான மரணம்தான். தன் அப்பாவின் மரணச் செய்தியை அவருடைய மகன் ஓடிவந்து கூறவும் “கண்கள் இருண்டு அப்படியே சரிந்து திண்ணையில் உட்கார்ந்தார்.” தன் மனைவி கொடுத்த தண்ணீரைக் குடித்து சமநிலைக்கு வந்தவர் திண்ணையில் இருந்து இறங்கி சங்கரப்பள்ளரின் வீட்டை நோக்கி ஒடி பட்டாசலையில் கிடத்தப்பட்டிருந்த உடலைக்கண்டு குலுங்கிக் குலுங்கி அழுதார். அன்று வீட்டில் உலை வைக்கவில்லை. பின் துக்கம் கேட்கவந்த அயலூர்க்காரர்களின் உணவுக்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

## கோடிபோடச் செல்லல்:

பின் வீடு திரும்பி மறுநாளான்று தம் குடும்பத்தினருடன் கோடிபோடக் கிளம்பினார். இக்காட்சியை “நெல் கம்பு சோளம், கடலை, கேழ்வரகு, சாமை, தினை, வரகு எனத் தானியங்கள் தனித்தனி மூட்டையில் இருந்தன. ஐந்து வாழைத்தார், நூறு தேங்காய், புது வேட்டி என அதுவும் இருந்தன.” தான் கொண்டு வந்த கோடி வேட்டியை சங்கப்பள்ளரின் உடல் மீது விரித்துப் போர்த்திவிட்டு அவரது கால்களைப் பிடித்தபடி அழுதார்.

## செட்டியாரின் மரணம்:

வீடு திரும்பிய பின்னர் வழக்கமான வேலைகளைச் செய்யாமல் “வட்டாரத்துக்கு வெளியே மேற்குப்புற வாசலில் கட்டிலைப் போட்டு படுத்துக் கிடந்தார்.” அவரது மருமகள்கள் சத்தம் போட்டுப் பேசுவது அவர் காதில் விழுந்தது. அதில் நடுவுள்ளவன் பெண்டாட்டி பேசியது “வாரத்தை பிசகாமல் “அப்படியே அவர் காதில் விழுந்தது. அதை நாமும் கேட்கலாமே!

“பள்ளத் தெருவிலே எழவு வுழுந்தா இவுக சீரு செனத்தியோட கோடி போடுவாகளாம். அதுக்கு நானும் தலை யில மூடையச் சொமந்து கிட்டு வரணுமாம். எங்கப்பன் அப்படியொன்னும் சாதிகெட்டுப் போயிவளர்க்கல எங்களைய மறுவடி எப்பவாது பள்ளத் தெருவுல எழவுன்னு என்னையக் கூப்பிடட்டும் அப்ப இருக்குது சேதி.”

இதைக் கேட்ட பின்னர் செட்டி கட்டிலை ஓரமாக வைத்துவிட்டு மர நாற்காலியைத் தூக்கிவந்து நடையில் போட்டார். சங்கப்பள்ளரின் உடலைச் சுமந்து சென்ற பாடை சென்ற வீதியைப் பார்த்தவாறே நாற்காலியில் சாய்ந்தார். யாரிடமும் பேசவில்லை.

“அவருடைய கண்களில் அளவில்லாத கோபம் தென்பட்டது. உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன.” ஆனால் யாருடைய கேள்விக்கும் பதில் சொல்லவில்லை” இறுதியாக கதையை இவ்வாறு முடித்துள்ளார் ஆசிரியர்:

“தொடர்ச்சியாக மூன்று நாட்கள் அன்னம் தண்ணீரில்லாமல் இறுகலான மனதுடன் இருந்த தூங்காச்செட்டி சங்கப் பள்ளர் இறந்த பதினாறாம் நாளில் நெஞ்சு வெடித்து உயிரை விட்டார்.”

## கதைகள் வெளிப்படுத்தும் செய்தி:

புதைகுழி, வட்டாரத்துக்கோடி என்ற இருகதைகளுக்கும் இடையில் உள்ள ஒற்றுமைக் கூறு இவற்றில் இடம் பெற்றுள்ள வகை மாதிரிப் பாத்திரங்களிடம் வெளிப்படும் மனித நேய உணர்வாகும்.

இவ்வுணர்வானது வழக்கமான வகைமாதிரிப் பாத்திரங்களின் செயல்பாடுகள், உலகியல் கண்ணோட்டங்களில் இருந்து விலகி நின்று செயல்படத் தூண்டியுள்ளன. இதனால் வகைமாதிரிப் பாத்திரங்கள் மரபு மீறிய பாத்திரங்களாகத் தம்மை மாற்றிக் கொண்டுள்ளார்கள்.

குடிஊழியக்காரரான நாவிதரை அடக்கம் செய்ய குடியானவரகள் குழிவெட்டியுள்ளார்கள் பதைகுழி கதையில் ஒட்டர்களின் மரபு மீறும் செயலும் மென்மையாக வெளிப்பட்டுள்ளது. ஊழியம் செய்வோருக்கு ஒட்டர்கள்தான் புதைகுழி வெட்டவேண்டும் என்ற மரபை எதிர்க்கவும் முடியாமல், தொடரவும் விரும்பாத நிலையில் வெளியூர் சென்றிருக்கலாமோ என்று கருத இடமுள்ளது.

வட்டாரத்துக் கோடி கதையில் இரு முரண்பட்ட சமூகம் சார்ந்தவர்களிடையே நிலவும் நட்புணர்வு வெளிப்படுகிறது. இக்கதையில் இடம் பெறும் மூன்றாவது மருமகள் எதிர்நிலைப் பாத்திரம் (வில்லன்) என்ற அடையாளப்படுத்தப் பொருத்தமான பாத்திரமாக விளங்குகிறாள். கதையின் தொடக்கத்திலேயே இதை ஆசிரியர் உணர்த்திவிடுகிறார். பட்டிப் பொங்கலுக்குச் செட்டியார் புறப்படும்போது “அப்படி என்னதான் பள்ளத் தெருவுல ஆடுதோ? ஊர்ல எங்கப்பனெல்லாம் பள்ளு பறையை யெல்லாம் தள்ளித்தான் வச்சிருப்பாக”. என்று அவள் முணுமுணுக்கும்போதே நமக்கு இப்பாத்திரத்தின் அடையாளம் வாசகனுக்குப் புரிந்துவிடுகிறது.

அடுத்து சங்கப் பள்ளரின் தோட்டத்தில் நடந்த கறிவிருந்தில் சரியாகச் சாப்பிடாமல் இலையை வெளிப்பக்கமாக மடித்துத் தன் கோபத்தை வெளிப்படுத்திவிடுகிறாள். இதைப் பார்த்த கடைசி மருமகள் இவ்வாறு மடிப்பது, “இவுக சங்காத்தம் இன்னமே எப்பவும் வேணாண்ணு அர்த்தமில்லையா இது? என்று கேட்டபோது “எங்கூர்ல இருந்தவரைக்கும் இப்படிப் பள்ளச் சனத்து வூட்டுக்கெல்லாம் நாங்க போனதேயில்ல. எங்க குலசாமிக்கு இந்தச் சனம் ஆகாது. தீட்டு.

இங்க என்னடான்னா எகனைக்கு மொகனையா இருக்குது” என்று பதிலளிக்கிறாள். இவையெல்லாம் தொடக்கத்திலேயே இவளை அடையாளம் காட்டி விடுகின்றன. அத்துடன் தூங்காச் செட்டியாரின் மீது வாசகன் கொள்ளும் மதிப்பை உயர்த்தவும் துணை புரிந்துள்ளது.

மொத்தத்தில் வர்க்கப் போராட்டத்திலும் பண்பாட்டுப் போராட்டத்திலும், டி.செல்வராஜின் மலரும் சருகும் நாவலில் இடம் பெறும் பட்டாளத்து ரங்கன் பாமாவின் அண்ணாச்சி கதையில் இடம் பெறும் அம்மாசி போன்ற எதிர்க்குரல் எழுப்பும் பாத்திரங்களின் தேவை ஒரு பக்கம் என்றால் புதைகுழியில் இடம்பெறும் காளியப்பக்கவுண்டன், ஆறுமுகக் கவுண்டன், வட்டாரத்துக்கோடியில் இடம்பெறும் தூங்காச்செட்டி போன்ற பாத்திரங்களும் தேவை. போர் முனையில் துப்பாக்கி, பீரங்கி, டாங் ஆகிய ஆயுதங்களைப் பயன்படுத்திப் போராடும் போர் வீரர்கள் ஒருபக்கம் என்றால் அவர்கள் முன்னேறவும் பதுங்கித் தாக்கவும் உதவும் பாதை அமைத்தும் பதுங்குக்குழி வெட்டியும் உதவும் சாப்பர்ஸ் என்ற பிரிவும் தேவை.



# அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநில மாநாட்டுக் காட்சிகள்
































**JANASAKTHI** Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
**Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026**
**WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026**
**Posted on Every Friday & Saturday at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57




Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.